# கொழுந்து 2013






கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம்
பிரித்தானியா

**Kllankaladdy Makkal Ontriyam UK**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் ஒரு காசி ஷேத்திரம் நித்திய மோட்ஷ தீபத்துடன்



# முரசுமோட்டை சிவன் கோவில்

*114 / 1 முரசுமோட்டைச பரந்தன், இலங்கை*

தொடர்புகளுக்கு

திரு க ந கிருபாகரன்
ஆலய தர்மகர்த்தா
இலண்டன்
+ 44 (0)7904 712 437

திருமதி செ கவிதா
செயலாளர்
இலங்கை
0094 777 761 409

---

**BBK** PARTNERSHIP

## Chartered Accountants and Business Recovery Professionals

www.bbkca.com



- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

## கடன் சுமையால் கஷ்டப்படுகிறீர்களா?

தனிநபரோ... வியாபாரமோ...

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

**உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்**

Contact: Kankeepan - 07956 255 520 / 020 8216 2530

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம்

பிரித்தானியா

பெருமையுடன் வழங்கும்

# கலைக்கொழுந்து 2013

23-02-2013

சனிக்கிழமை

மாலை 6-00 மணி

**Winston Churchill Hall**

**Pinn Way, Ruislip, Middlesex HA4 7QL**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம் - பிரித்தானியா
## Kollankaladdy Makkal Ontrium – United Kingdom
**37 Gantshill Crescent, Ilford, Essex IG2 6TS**

### Patrons

Dr C Pathmanathan    Dr (Mrs) Shanthi Rajasooriyar    Mr Siva. Thamboo

### President



Mr Sittampalam Kamalakannan

### Secretary



Mr Sivapatham Ramachandran

### Treasurer



Mrs Thembamalar Sooriyanarayanan

### Vice President



Mr Appaiah  Murugathas

### Asst. Secretary



Mrs Vasantha Thayalan Navaratnam

### Asst Treasurer



Mrs Sugirtha Dilipkumar

### Cultural Secretary



Mrs Gowry Ganeshakumar

### Sports Secretry



Mr Ponnuthurai Sooriyakumar

## Committee Members:

Mr Poothappilai Vairavanathan    Mr Veluppillai Kathigamanathan
Mrs Suganthy Raveendran    Mr Rasiah Hariharan
Mr Ponnuthurai Mahendran    Mr Apputhurai Selvarajah

<u>For contacts:</u>

**Kannan** 07946 303 627    **Ram** 07908 818368    **Sugirtha** 07875 998 087

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றியத் தலைவரின் செய்தி

கொல்லங்கலட்டி என்ற எமது ஊருடன் தொடர்பு கொண்ட அணைவரையும் இந்த கலைநிகழ்ச்சியின் மூலம் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது ஊர் – கொல்லங்கலட்டி – காங்கேசன்துறைத் தொகுதியில் தெல்லிப்பழை என்ற கிராமத்தின் முக்கியமான ஊராகும். விவசாய மண் நிறைந்த நமது ஊர் பல்வேறு பொருள்களின் விளைநிலமானாலும் வெற்றிலைக்கு பெயர் பெற்றது. எனவேதான் இந்த மலரின் பெயரை கொழுந்து என வைத்ததுடன் எமது கலை நிகழ்ச்சியையும் கலைக்கொழுந்து என அழைக்கின்றோம்.

மேலும் எமது கிராமம் புராதன வரலாற்றைக் கொண்டுள்ளதற்குச் சான்றாக இங்கு திருவீற்றிருக்கும் விநாயகர் ஆலயம் உள்ளது. சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட முதல் விநாயகர் ஆலயம் இதுவாகும். எமது பாடசாலையின் வரலாறும் மிகவும் பழமையானது. மிஷன் காலத்தில் சைவ சமயம் அழிவுறும் நிலைகண்டு எமது ஊரின் பெருமகன் அமரர் ஆ வேலுப்பிள்ளை உபாத்தியாயர் இந்த சைவ வித்தியாசாலையை 1872இல் உருவாக்கினார். பின்னர் இவரின் மகனான அமரர் வே சிறற்றம்பலம் அவர்கள் முகாமையாளராகப் பணியாற்றினார். இவ்வாறாக எமது முன்னோர்கள் கல்வியும் சமயமும் வளர்க்க அரும்பாடு பட்டனர். எமது சிறிய ஊரின் நான்கு பெருமக்கள் அரசியலில் சேவையாற்றி பாராளுமன்ற உறுப்பினர்களாக விழங்கி எமக்குப் பெருமை தந்துள்ளனர்.

எமது ஊர் பல்வேறு சரித்திரபூர்வமான அல்லது முக்கியமானவைகளின் நடுவே உள்ளது. எமது ஊரின் எல்லைகளில் சீமெந்துத் தொழிற்சாலை, மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், மகாஜனக் கல்லூரி, கீரிமலை சிவன் கோவில் என புகழுக்கும் பெருமைக்கும் உள்ள நிறுவனங்கள் சூழ்ந்துள்ளன. இவற்றின் நடுவில் விவசாயக் கிராமமாக அமைதியுடனும் செழிப்புடனும் சுறுசுறுப்பாக விழங்கியது எமது ஊர். கடந்த இருபது ஆண்டுகளாக நாட்டில் நிலவிய போர்ச்சூழலாலும் அதன் விளைவான அனர்த்தங்களாலும் எமது மண் மக்களற்ற சூனியப் பிரதேசமாகி விட்டது. இன்று மக்கள் மீண்டும் குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனாலும் நிலைமை சீராகவில்லை. எமது ஊரில் காலம்காலமாக வசித்துவந்த மக்களில் கணிசமானோர் புலம்பெயர்ந்து பிரித்தானியா, ஐரோப்பா, கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா என உலகின் செல்வந்த நாடுகளுக்குக் குடியேறி விட்டார்கள்.

காலத்தின் தேவை கருதி 2011இல் நம் ஊரவர்களை இணைத்து ஒன்றுகூடலை நடாத்திய நாம் 2012 இல் மீண்டும் ஒன்றுகூடலை நடாத்திய போது அனைவரின் வேண்டுகோளை ஏற்று **கொலங்கலட்டி மக்கள் ஒன்றியம்** என்ற அமைப்பை உருவாக்கியுள்ளோம். எமது நிர்வாகத்தின் பெருமுயற்ச்சியால் இன்று **கலைக்கொளுந்து** என்கின்ற கலைநிகழ்வையும் உங்கள் கைகளில் தவழுகின்ற **கொழுந்து** என்கின்ற மலரையும் வெளியிடுகின்றோம்.
செல்வந்த நாடுகளிற்குப் புலம்பெயர்ந்தவர்களில் பிரித்தானியாவிற்குக குடியேறியவர்கள் முக்கியமானவர்கள். கணிசமானவர்கள். எனவே நாம் வாழ்ந்த எமது மண்ணை மீண்டும் வளமாக்கும் திட்டமொன்றை உருவாக்கியும் ஊரின் தேவையுமறிந்தும் செயலாற்றி எமது ஊரை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவரவேண்டும். இதன்மூலம் எமது ஊர் மீண்டும் **பழைய கொல்லங்கலட்டியாக** வேண்டும் இவைதான் எமது குறுகிய காலத் திட்டங்கள். நாம் இந்த ஒன்றியத்தை உருவாக்கக் காரணமானவை. எமது திட்ங்களுக்கும் நடவடிக்கைகளுக்கம் உங்கள் எல்லோரினது உதவியும் முக்கியமானவை.

இந்த விழாவை நடாத்தவும் மலரினை வெளியிடவும் நிறையப் பேர் உழைத்துள்ளார்கள். இவர்கள் அனைவருக்கும் எமது நன்றி. இன்றைய நிகழ்வில் கலந்து கொள்கின்ற விருந்தினர்கள், கலைஞர்கள், ஊரவர்கள் மற்றும் நண்பர்களுக்கு எமது நன்றி.

எங்களை ஆதரியுங்கள். இணைந்து வெற்றி பெறுவோம்.

நன்றியுடன்

சிற்றம்பலம் கமலக்கண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம்
# பிரித்தானியா

## வாழ்த்துரை

ஜனநாயகம் மேலோங்கி மிளிரும் இலண்டன் மாநகரில், பரந்து வாழும் எம் ஈழத்தமிழர்களின் தமது ஒவ்வொரு ஊர்களின் பிறந்த மண்ணிற்குத், தம்மாலான பங்களிப்பைக் கொடுக்க வேண்டும் என்கின்ற ஊரவர்களின் எண்ணம், ஒவ்வொரு ஊரின் பெயர் கொண்ட சங்கங்களும்
ஒன்றியங்களும் நிலையங்களும் பரந்து மிளிர்ந்து இன்று சேவை ஆற்றி வருகின்றன.
அந்த வகையிலே உருவான கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியமும் அவ்வூர் கோயில்களின் நலனில், மக்களின் நலனில், ஊரின் நலனில் அக்கறையும், பரந்த சேவை மனப்பான்மையும் கொண்டு, செயற்பட தொடங்கியுள்ளோம்.

ஞாலம் கருதினுங் கைகூடும்- காலம்
கருதி இடத்தார் செயின்.

எனும் வள்ளுவர் கூற்றானது எமது ஒன்றியத்தின் செயற்பாடுகளுக்கு ஊன்று சக்தியாக அமைந்திடும் நிலையில் கொல்லங் கலட்டி மக்கள் ஒன்றியம் தனது பணிகளை நிலை நிறுத்தி செய்யும் என்பதிலே ஐயம் இல்லை.
எல்லோர் வாழ்வும் சிறந்திட நன்றே செய் இன்றே செய் என்ற கூற்றுக்கிணங்க, அன்பு கருணை அமைதி மகிழ்ச்சி ஒற்றுமை மேலோங்கிட, ஒன்றிய செயற்பாடுகள் தொடர, எமது மனமுவந்த நல் வாழ்த்துக்கள்.


சிவநெறிச் செல்வர்
சிவ தம்பு
போஷகர்.

26-01-2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from the Chief Guest

*Dr (Mrs) Kamala Jayaratnam*



I have great pleasure in participating in this inaugural occasion to raise funds for my home village Kollankaladdy, Jaffna, Sri Lanka.

Kollankaladdy is a village closer to Keerimalai and Maaviddapuram, the two famous places in Jaffna Peninsula. Our village is strongly affiliated with MahajanaCollege.

The primary school in Kolankaladdy has provided a strong platform for education whilst imparting a solid religious foundation. The proximity of the Pillaiyar Temple and the religious influence of Sittampalam Master, the school founder's son and our family friend, greatly contributed towards its development. All my six younger siblings benefited immensely from the primary education they received at this school. Most people from Kolankaladdy have continued on to their secondary education in the nearby Mahajana College. I am proud to share that our village has produced many successful professionals both at home in Sri Lanka and abroad.

The Annual festivals were always conducted beautifully in the temple by our priests and I am sure that the UK **Kolankaladdy Makkal Onriyam**, along with their counterparts in Kollankaladdy, will strive to return the school and the temple to their former high standard. With the advent of the civil war, Kolankaladdy was very much affected for many years. During this period people were displaced from their homes and had to face hardships moving elsewhere. Their homes, the school and the temple were all destroyed and the ruins remain neglected.

The war ended in 2009 and a year later people began to return to their homes. I understand that just over 100 families have moved so far but the facilities remain very poor. They are in great need of our financial support. Contributions would be used for refurbishment of the temple, the school and the improvement of local facilities. The lady teacher presently providing a nursery class in this derelict environment deserves our praise. I hope that Onriyam will be able to restore the place of worship, the school and the glory of the community life to the level that we experienced in the pre-war years and thus make us all proud.

I have not seen my home village since 1978. I attempted to visit my home in 2005 but was refused entry. When I visit in the very near future I hope to see these improvements in our village.

We, who have originated from Kollankaladdy and the surrounding villages, highly appreciate the present committee coming forward to redevelop the community, especially the school and temple, the lifeline for the people in this area.

**I feel greatly honoured to be invited to take part in this occasion.** I would like to see the expatriates from our village and other well-wishers contribute to this great effort initiated by the committee of UK Makkal Onriyam in rebuilding the village.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவை கொலங்கலட்டி ஸ்ரீவீரகத்திப்பிள்ளையார் கோவில வரலாறும் வளர்ச்சியும்

-சு சிவஷண்முகானந்தக் குருக்கள்

சைவமும் தமிழும் தழைத்தோங்கி நிற்கும் இலங்காபுரியின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தில் தலைசிறந்த பதியாகிய மாவிட்டபுரத்தில் 8ம் நூற்றாண்டில் சோழராச குமாரத்தியாகிய மாருதப்புரவீக வல்லியின் குன்ம நோயும் குதிரைமுகம் கந்தசாமியாரை பிரதிஷ்டைசெய்து பிறர் பார்வைக்கு மாறியும் சொந்தப் பார்வைக்கு மாறாமலும் இருந்ததைச் சிந்தித்து உணர்ந்து ஏழு இடங்களில் விநாயகப் பிரதிஷ்டை செய்வதாக நேர்த்திக்கடன் செய்து முதலாவதாகக் கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகரையும், பன்னாலை, அளகொல்லை, கும்பளாவளை, பெருமாக்கடவை, ஆலங்குளாய், கல்வளை ஆகிய இடங்களில் விநாயகப் பிரதிஷ்டை செய்வித்ததின் பயனாகக் குன்ம நோயும் குதிரை முகமும் நீங்கியது. அருவருப்பு மாறியது.

கொல்லங்கலட்டியில் தற்போதுள்ள கேணிக்கு முன்பாக இருந்த ஆலமரத்தின் கீழ் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. மழை, வெய்யில் முதலியன பட்டதால் இவ்விக்கிரகத்தை அயலில் உள்ள வீட்டில் வசித்துவந்த திரு.பூ குமாரவேலு என்பவர் தமது வீட்டில் ஒரு பகுதியில் வைத்து அவரும் பிறரும் வழிபட்டு வந்தனர். இப்படிப் பலரும் வழிபட்டு வந்தாலும், ஆசௌச காலங்களில் பூசை செய்ய முடியாதிருந்தாலும், தற்போதுள்ள பூஞ்சோலைக்கு மேற்கே மண்ணினால் ஆலயமமைத்து வழிபட்டு வந்தனர். திரு.பூ குமாரவேலு என்பவர் சிவபதமடைய அவர் மகனாகிய திரு.கு பொன்னம்பலம் என்பவரும் தந்தையார் செய்துவந்த கைங்கரியங்களைச் சிறிதும் குறைவின்றிச் செய்து வந்தார். இவர் இருக்கும்போதே இவரது மகன் சிவஸ்ரீ. பொ.அம்பலவாணக்குருக்கள் அவர்கள் சிவாகம விதிப்படி கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், நிருத்தமண்டபம், ஸ்தம்பமண்டபம், மடைபள்ளி முதலியவற்றை அமைக்க விரும்பி அயலிலுள்ள காணியைத் தர்மசாதனம் செய்வித்தும் விலைக்கு வாங்கியும் ஆலயத்தை விதிப்படி சுண்ணாம்பினால் தற்போதுள்ள இடத்தில் அமைத்து 1872ஆம் ஆண்டு வைகாசி மீ அத்த நட்சத்திரத்தில் மகாகும்பாபிஷேகம் செய்வித்தார். அன்று தொடக்கம் அலங்கார உற்சவம் நடைபெற்று வந்ததுடன் நவராத்திரி, திருவெம்பாவை, சிவராத்திரி முதலிய காலங்களில் விசேட அபிஷேக ஆராதனைகளையும் செய்யவேண்டிய கிரியைகளையும் செய்து வந்தார்.

தற்போதுள்ளபடி சுற்றுமதில் கட்டத் தீர்மானித்தும் பணவசதியில்லாதபடியால் அதற்கு நிலையமிட்டு வைத்தார். 1896ல் அகாலமடைந்ததால் கட்டப்படவில்லை. சில மாதத்தில் ஸ்தம்ப மண்டபம் புயல் காற்றினால் சேதமாகியதால் திருவிழாக்கள் ஸ்தம்பித்தது. ஆனால் நித்திய பூசைகள் கிரமமாக நடைபெற்றுவந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பின் 1896ஆம் ஆண்டு அவரது மகன் திரு. அ.பொன்னையா தேசிகர் அவர்கள் நிர்வாகப்பொறுப்பையும் குடும்பப்பொறுப்பையும் ஏற்று நடத்தி வந்தார். தந்தையார் இறந்த சில வருடங்களில் அயலவர் பலர் வற்புறுத்தியதனால் கோவிலை ஆடு மாடுகள் அசுத்தப்படுத்தாமல் சுற்றுமதிலைத் தந்தையார் தீர்மானித்தபடி உருவாக்கினார். அத்தோடு தற்போதுள்ள சிறிய எழுந்தருளி விநாயக விக்கிரகத்தையும் கும்பாபிஷேகம் செய்துவித்தார்.

1925ஆம் ஆண்டு திருடர்களால் மூலஸ்தான விக்கிரகம் புரட்டி ஆதார சிலையில் வைக்கப்பட்டிருந்த தங்க யந்திரத்தைக் களவாடியதால் விக்கிரகம் பாலஸ்தாபனம் செய்து ஆலய விமானத்துக்கு வர்ணம் வைத்து பழுதுகளைத் திருத்தி சில மாதத்தின் பின் 1926 ஆம் ஆண்டு ஆனி மீ அனுஷ நட்சத்திரத்தில் மகா கும்பாபிஷேகம் செய்வித்து தந்தையாரினால் நடத்தப்பெற்ற அலங்கார உற்சவத்தையும், சிவராத்திரி, திருவெம்பாவை, பிள்ளையார் கதை, விநாயக சதுர்த்தி முதலிய புண்ணிய காலத்தில் அபிஷேக ஆராதனைகளும் மற்றும் செய்யவேண்டிய கைங்கரியங்களைச் செய்தும் விசேடமாகச் செய்யவேண்டிய கிரியைகளையும் செய்வித்து வந்தார்.

இதன்பின் கோபுரம், யாகசாலை, வசந்தமண்டபத்தைக் கட்டி, கொடிமரம் நாட்டி 1929ஆம் ஆண்டு கொடியேற்றத் திருவிழாவைத் தொடக்கமாக் கொண்டு மகோற்சவம் நடைபெற்று வந்தது. பின் பரிவார மூர்த்திகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

மூலஸ்தானம் பழுதுற்றிருந்ததால் அதை இடித்து வைரக்கல்லினால் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், அமைத்து 1941ஆம் ஆண்டு பங்குனி மீ அத்த நட்சத்திரத்தில் மூலமூர்த்திக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதன்பின் செய்யவேண்டிய திருப்பணிகளைச் செய்து தேர் முட்டி மண்டபத்தையும் கட்டிக் குறையில் இன்றும் உள்ளது. தேர்த்திருப்பணியும் சில்லுகள் அச்சுக்கள் செய்வித்தபின் ஸ்தம்பித்தது.

மேலும் சுருங்கக்கூற்றின் இவரது பெரு முயற்சியால் சிறியதாகவிருந்த கோயில் சுற்றுமதில், வசந்தமண்டபம், யாகமண்டபம், ஸ்தம்பமண்டபம், கோபுரம், வசந்தமண்டபவாயில், மடைப்பள்ளிவாயில் மண்டபங்களை அமைத்து ஓர் பெரிய ஆலயமாக 63ஹா நிர்வகித்து 1958ஆம் ஆண்டு மார்கழி மாதம் அமரத்துவம் அடைந்தார். இவர் புகழ் என்றும் அழியாது நிலைத்திருக்கும் என்பதில் சற்றேனும் சந்தேகமில்லை.

பின்பு நிர்வாகப் பொறுப்பையேற்ற அன்னவர் புத்திரன் ஸ்ரீலஸ்ரீ பொன். அம்பலவாணக்குருக்கள் தந்தையாரால் செய்யப்பட்ட கட்டிடங்களைப் பழுதுபார்த்துத் திருத்தி வந்தார். லட்சார்ச்சனை விநாயக விரதம் 21 நாளும் விசேட அபிஷேகங்கள், சதுர்த்தி அபிஷேகங்கள், புராண படலங்கள், இன்னும் அநேக வைபவங்களைத் தொடக்கி நடாத்தி வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1975 ஆம் ஆண்டு வைகாசி மீ மகாமண்டப, நிருத்த மண்டப வேலைகள் தொடங்கி மிகக்குறுகிய காலத்துள் முடிக்கப்பட்டது. ஆவணி மீ பாலஸ்தானம் செய்து தூபிகள் திருத்தி வர்ணம் வைத்தும், மடைப்பள்ளி சுற்றுமதில் திருத்தி, மின்சார உபகாரணங்கள் புதுக்கியும், இராட்சத ஆண்டு தை மீ 23 ஆம் நாள் (06.02.1976) இல் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

**தேர்த் திருப்பணி**

1929ஆம் ஆண்டு தொடக்கம் பிரதானமாகத் தேர்த்திருவிழா நடைபெறவேண்டிய சூழ்நிலையேற்பட்டும் சகடையில் சிறிய அளவில் தேர்கட்டி விழா நடத்தப்பட்டு வந்தும் பல பொதுமக்கள் வேண்டுகோளின்படி திரு.அ.பொன்னையா தேசிகர் அவர்களால் திருப்பணி தொடங்கித் தேர்ச் சில்லுகள் அச்சு முதலியன செய்யப்பட்டபின் சில சூழ்ச்சிகளால் கைவிடப்பட்டது. ஆலயத்துக்குரிய சகடை பழுதடையப் பல வருடங்களாக வேறு ஆலயங்களிலுள்ள சகடைகளில் தேர்கட்டி விழா நடாத்திவரப்பட்டது. பின் திரு.சின்னத்தம்பி அவர்களால் செய்து கொடுக்கப்பட்ட சப்பரச் சகடையில் சிறிய தேர் கட்டி விழாச் செய்யப்பட்டது.

இதைப் பார்த்து வருந்திய பொதுமக்கள் பலர் அஞ்ஞான்று திருவாகஸ்தராக இருந்த பொன்னையாதேசிகரிடம் முறையிட்டும் வருந்தியும் எம்பெருமானைப் பிரார்த்தித்தும் வந்தனர். இதன் பலனாக இவ்வூர் வாசிகள் பலர் சேர்ந்து திரு. வ.சரவணமுத்து JP அவர்களைத் தலைவராகக் கொண்ட ஓர் தேர்த்திருப்பணிச் சபையை உருவாக்கி பல வருட முயற்சியால் ஓர் அழகிய தேரை உருவாக்கி 1965 ஆம் ஆண்டு வைகாசி மாதம் எம்பெருமான் சர்வோபசாரங்களுடன் பக்தர்கள் அரகர கோஷங்கள் செய்யத் திருநடனத்தோடு நூதன ரதத்தில் ஆரோகணித்து பக்த கோடிகளுக்குக் கிருபை செய்தார்.

**கேணித் திருப்பணி**

ஆலயத் தீர்த்தோற்சவம் உட்பிரகாரத்திலுள்ள திருமஞ்சனக் கிணற்றிலேயே தீர்த்தம் கொடுக்கப்பட்டது. சில வருடங்களுக்கு முன் பலர் விரும்பியும் முயற்சி எடுக்காது விட்டனர். பின் திருமதி தையற்பிள்ளை இராமலிங்கம் என்பவர் கோவில் நிர்வாகஸ்தரைப் பலமுறை கேட்டபோது இது ஆலயத்துக்கு முன்பே கேணி இருந்தாலும் இதை எம் மூதாதையர் தீர்த்தத்துக்கு உபயோகப்படுத்தாததாலும் பெருமான் திருவுளப்பாங்கின் வண்ணமே செய்யவேண்டுமென்று பூக்கட்டிப் பார்த்து திருவுளப் பாங்கு திருத்தும்படி வந்ததால் முன்னாள் கிராமசபைத் தலைவர் திரு. த செல்வரத்தினம் அவர்களும் ஊர் வாலிபர்களும் சேர்ந்து நிதி திரட்டியும் சிரமதானமூலம் செய்யக்கூடியவைகளைச் செய்தும் கேணியைத் துப்பரவாக்கி சுவர்களைப் புதிதாகக் கட்டி இளைப்பாறு மண்டபமும் அமைக்கப்பட்டது. முதன்முதலாக 1969ஆம் ஆண்டு வைகாசி மகோற்சவத்தின் போது கேணியில் தீர்த்தமெடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ரதாரோகண மண்டபத் திருப்பணி**

புதிய தேர் செய்தும் தேரில் சுவாமி ஏற்றுவதற்கு மண்டபமில்லாத குறையை இவ்வூரவர்கள் பலர் சேர்ந்து தலைநகராகிய கொழும்பில் சபையை உருவாக்கி நிதி திரட்டி மண்டபத்தை உருவாக்கி 1971 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இதை விரைவில் நடைபெற திரு சு. துரைசிங்கம் அவர்களும், திரு. சி சங்கரப்பிள்ளை அவர்களும் பலவகையில் ஊக்கமெடுத்தனர்.

இவ்வாறு பல திருப்பணிகள் பொதுமக்கள் ஒத்துழைப்போடு நிதியும் மனமுவந்து அளித்தால் தற்போது ஆலயம் எழில்மிகு தோற்றத்தோடு இருப்பதுடன் வளர்ச்சியடைந்திருக்கின்றது. இன்னும் வளர்ச்சியடையுமென்பதில் ஐயமில்லை.

**ஆலய விழாக்கள்**

இவ்வாலயத்தில் தினமும் 3 காலப் பூசைகள் சிவாக முறைப்படி நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு வருஷப்பிறப்பின் போது சங்கிராந்தி புண்ணிய காலத்தில் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். பல பக்தர்கள் வந்து பெருமானுக்குப் புதிய பட்டுவஸ்திரம் சாத்தி அரிச்சனை வழிபாடுகள் செய்விப்பார்கள்.

ஆலய மகோற்சவம் வைகாசி மாதப் பூரணையைத் தீர்த்தமாகக் கொண்டு 10 தினங்கள் விழா நடைபெறும். கொடியேற்றத்தை முதலாகக் கொண்டு ஆரம்பித்து 8ஆம் நாள் சப்பரத் திருவிழாவும், 9ஆம் நாள் தேர்த்திருவிழாவும், 10ஆம் நாள் பகல் தீர்த்த விழாவும், இரவு கொடியிறக்க வைபவமும் நடைபெறும். 7ஆம் நாள் இவ்வூரவர்கள் சேர்ந்து எழுந்தருளி விநாயகப் பெருமானுக்குச் சாயரட்சைப் பூசையில் அதிகமான அபிஷேகம் செய்விப்பார்கள். இக்காட்சி மிகவும் அழகாக இருப்பதுடன் பக்தி பரவசத்தை யூட்டுவதாக அமையும்.

விநாயக சதுர்த்தித் தினத்தில் சங்காபிஷேகம் நடைபெற்று சுவாமி திருவீதியுலா வருவார். நவராத்திரி தினங்களில் மூலமூர்த்திக்கும் மகாலட்சுமி அம்பாளுக்கும் விசேட பூசைகள் நடைபெற்று விஜயதசமியிலன்று மானம்பு உற்சவம் நடைபெறும். சர்வாலய தீபத்தினத்தன்று தீப தரிசனமும் மறுநாள் தொடக்கம் 21 நாட்கள் வரை விநாயக விரதம் விநாயகப் பெருமானுக்கு பகல் இரவு ஆகிய இரு காலங்களிலும் விசேட அபிஷேகமும், சோடசோபசார மகா பூசை நடைபெறுவதுடன் காலையில் பிள்ளையார் கதை படிக்கப்படும். விநாயகசஷ்டி தினத்தன்று மாலையில் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று பிள்ளையார் கதை படித்துத் திருவிழா நடைபெறும். முதல் நாள் மாலை கஜமுகாசுர சங்காரத்திருவிழா நடைபெறும். தைப்பொங்கல், தைப்பூசம், முதலாய தினங்களில் அபிஷேகமும், திருவிழாவும், மாசி சங்கட சதுர்த்தித் தினத்தில் மாலை சங்காபிஷேகமும் நடைபெற்று, சந்திரோதயத்தில் விஷேட பூசை, ஆராதனைகள் நடைபெறும்.

மேலும் ஒவ்வொரு மாத சுக்கிலபக்ஷ சதுர்த்தியில் சாயரட்சை பூசையில் விசேட அபிஷேகமும் உற்சவமும் நடைபெறும். மேலும் ஆடி மாதச் செவ்வாய்க்கிழமைகள், புரட்டாதிச் சனிக்கிழமைகள், ஐப்பசி வெள்ளிக்கிழமை, ஆவணி ஞாயிற்றுக்கிழமைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபாவளி முதலிய காலங்களில் விசேட பூசைகள் நடைபெறும். அநேக அடியார்கள் சுவாமி தரிசனம் செய்வார்கள்.

சிவராத்திரி, திருவெம்பாவை முதலிய காலங்களில் மூல மூர்த்திக்கும் சிதம்பரரேஸ்வரப் பெருமானுக்கும் உரிய விதிப்படி ஆராதனைகள் நடைபெறும்.

தெண்டாயுதபாணிக்கு சுக்கிர வாரந்தோறும் ஸ்கந்தசட்டி, குமாராலய தீபம் முதலிய காலங்களில் விசேட பூசையும் மகாலட்சுமிக்கு நவராத்திரி, வரலட்சுமி விரதம் முதலிய தினங்களிலும், சனீஸ்வரனுக்குப் புரட்டாதி மாதத்துச் சனிக்கிழமை தோறும் விசேட ஆராதனைகள் நடைபெறும்.

எனது நிர்வாகத்தில்

1976ஆம் ஆண்டு ஜீர்ணோதாரண இரஜபந்தன் அட்டபந்தன புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் எவ்வளவு குறுகிய கால இடைவெளியில் நடைபெற்றதோ அவ்வளவு குறுகிய காலத்தில் 02.12.1976 ஆம் ஆண்டு ஒரு இறுதி விருப்பாவணம் ஒன்றை விட்டு 18 வருடங்கள் நிர்வாகித்து எனது மாமனார் ஸ்ரீலஸ்ரீ பொன் அம்பலவாணக் குருக்கள் அவர்கள் அமரத்துவமானார்.

அமரர் அவர்களின் இறுதி விருப்புக்கு இணங்க அன்று தொடக்கம் மேற்படி ஆலயத்துக்கும் அவரால் சாதனம் செய்யப்படாத சொத்துக்களுக்கும் உரித்தாளரானேன். குறித்த மரணசாதனம் உண்மையானதென நிரூபிக்கப்பட்டு 13.10.1977 இல் ஸ்ரீலங்கா குடியரசின் பகிரநம்பிக்கை பொறுப்பாளரால் என்னை நிறைவேற்றுனராகவும் உரித்தாளராகவும் நியமித்து அன்னாரால் விட்டுச் சென்ற சொத்துக்கள் என்னிடம் கையளிக்கப்பட்டன.

பல புணரத்தாரணப்பணிகளைச் செய்தும் பூசைகளை திருவிழாக்களைச் செய்து வந்து 1988ம் ஆண்டு புணராவர்த்தன மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. 1991 பெப்ரவரி 6ம் நாள் நாட்டின் வன்செயலால் பொம்பரால் ஆலயம் சேதமாக்கப்பட்டது. முன்னும் பின்னும் ஷெல்களினால் சேதமானது. 10.06.1992ல் படையினர் பிரவேசிக்க பூசைகள் ஸ்தம்பித்தது. 13.04.1997ல் அதி உத்தம ஜனாதிபதி திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா அவர்களின் பணிப்புரையின் படி காங்கேசன்துறை கட்டளைத்தளபதியின் அனுமதியுடன் உயர்பாதுகாப்பு வலயமாதலால் படையினரின் பாதுகாப்புடன் சென்று பூசைகள் திருவிழாக்கள் செய்யப்பட்டு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலை வரலாற்றுச் சுருக்கம்

- வேலுப்பிள்ளை தனபாலசிங்கம்
முன்னாள அதிபர், கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலை

இலங்கையில் பிரித்தானிய ஆட்சி நிலைத்ததும் அவர்களுடன் வருகை தந்த சமயக்குரவர்கள் பள்ளிகளை நிறுவி தம் மதத்தை பரப்புவதில் ஆர்வம் காட்டி வந்தனர். ஆங்கிலம் நிர்வாக மொழியானதால் வேலைவாய்ப்புகள் பெறுவதற்கும் அதன் மூலம் செல்வாக்கும், செல்வமும் பெறுவதற்கு ஆங்கிலக் கல்வியின் அவசியம் ஏற்பட்டது. இத்தேவையை உணர்ந்த கிறிஸ்தவ சமயக்குரவர்கள் தம் பள்ளிகளில் ஆங்கிலத்துடன் சேர்த்து மதத்தையும் போதிக்க முனைந்தனர். கிறிஸ்தவ பள்ளிகள் அரசினரின் ஆசியுடன் வடக்கில் பல பாகங்களிலும் ஆரம்பிக்கப்பட்டன. பிள்ளைகள் அப் பள்ளிகளில் சேர்ந்தபொழுது அவர்கள் பெயர் கைவிடப்பட்டு கிறிஸ்தவ பெயர்கள் இடப்பட்டு மதமாற்றமும் ஏற்பட்டது. இச் செயற்பாட்டினால் தமிழினம் தனது அடையாளத்தையும் தனித்துவத்தையும் இழந்து விடும் அபாயம் எழுந்துள்ளதாக உணரப்பட்டது.

இதுவரை காலமும் வைதீகத்தில் வாழ்ந்தவர்கள் சமயத்திற்கும் கல்விக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை அறியத் தலைப்பட்டனர். "நாவலர் செய்த இடிமுழக்கங்கள் இந்து அடிப்படையில் தான் உருவாகியன" என கல்விமான் ஹன்டி பேரின்பநாயகம் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. நாவலர் காலத்தில் (1822-1879) "சைவமும் தமிழும்" என்ற கோஷம் ஈழத்தின் வடபகுதியில் மேலோங்கியது. போராசிரியர் சிவத்தம்பி கூறியது போல் "நாவலரது கண்ணோட்டத்தில் தமிழ் என்பது சுதேச பண்பாட்டு கருவூலமாக விளங்கியது" அப்பண்பாட்டு கருவூலம் பிறரது கையில் சிக்கி அவர்களால் ஆயுதமாக பயன்படுத்தக் கூடாது என்பதற்காகவே தமிழை சைவத்திலிருந்து பிரிக்கமுடியாத ஒன்றாக கொண்டார். எனவே அவர் பிரசாரங்களில் ஈடுபட்டது மாத்திரமன்றி சைவத்தமிழ் பாடசாலைகளை நிறுவியும் பிறர் நிறுவ ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தார்.

நாவலரின் பணியை முன்னெடுக்க கிராமங்களில் பல பரோபகாரிகள் முன் வந்தார்கள். கந்தரோடை கந்தையா உபாத்தியார், காரைநகர் அருணாசலம், சீ. வை. தாமோதரம்பிள்ளை, கறல் விசுவநாதபிள்ளை, மு. கி. இராசரத்தினம், சு. சிவபாதசுந்தரம், சு. இராசரத்தினம், தே. ஆ. துரையப்பாபிள்ளை ஆகியோர் தமது கிராமங்களில் சைவப்பள்ளிகளை நிறுவினார்கள். நாவலர் காலத்தில் ஊற்றெடுத்த "சைவமும் தமிழும்" என்ற உணர்வு ஓடிப் பெருகி பின்பு மதஉணர்வைக் கடந்து தமிழ் தேசிய உணர்வு உருப்பெற உதவியது. மேற்குறித்த பெரியோர்கள் உருவாக்கிய கல்வி நிலையங்கள் தான் பிற்காலத்தில் தமிழ் தேசியத்தில் விளைநிலமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு ஆறுமுகம் வேலுப்பிள்ளை அவர்கள் நாவலர் பணியைத் தொடர ஓர் பள்ளியை நிறுவ எண்ணி அதற்கேற்ற சூழலைத் தேடி தமது கிராமமாகிய கொல்லங்கலட்டியில் மாருதப்புரவிவல்லியினால் முதன் முதலில் நிறுவப்பட்ட பிள்ளையார் கோவில் சூழலில் 1869ம் ஆண்டு கோவிலுக்கு கிழக்குப் புறமாக அவருக்குரியதாக இருந்த அரைப்பரப்பு காணியில் ஓர் கொட்டிலை அமைத்து 40 பிள்ளைகளுடனும் 03 ஆசிரியர்களுடன் சைவவித்தியாசாலையை நிறுவினார். நிறுவிய காலம் தொடக்கம் 1915ம் ஆண்டு சித்திரை மாதம் 04ம் திகதி அவர் இறைவனடி சேரும்வரை அவரே தலைமை ஆசிரியராக இருந்து பாடசாலையை நாடாத்தி வந்தார். பிள்ளையவர்களுக்கு உறுதுணையாக தண்டிகை உபாத்தியாயரும் வேதவன உபாத்தியாயரும் உடன் இருந்து ஆசிரியப் பணி புரிந்தனர். மற்ற ஆசிரியர்களின் பெயர் கிடைக்கப் பெறவில்லை.

இவ் வித்தியாசாலையில் தமிழ் மொழி, வடமொழி, தமிழிலக்கியம், சமயம், கணிதம், வரலாறு ஆகிய பாடங்கள் போதிக்கப்பட்டு வந்தன. இரவு காலங்களில் வளர்ந்தோர் நலன் கருதி புராண படிப்பு நடத்தப்பட்டு வந்தது. 1872ம் ஆண்டு அரசின் அங்கீகாரம் பெறப்படும் வரை அரசின் உதவியோ அல்லது வேறு எந்த நிறுவனத்தின் உதவியோ அன்றி கிராமத்து மக்களின் உதவியுடன் பிள்யைவர்கள் இவ் வித்தியாசாலையை நடாத்தி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. வேதனம் ஏதுமின்றி சேவை உணர்வுடன் ஊரவர் கொடுக்கும் சிறு பணத்துடன் பணியாற்றிய இவ் ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

இவ் வித்தியாசாலை இலவச கல்வி வழங்கும் பாடசாலையாகவே ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வந்தது. கட்டணம் செலுத்தி கல்வி கற்க இயலாத கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகளின் பிள்ளைகள் கல்வி பயில வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து அவர்கள் வாழ்வு உயர இவ் வித்தியாசாலை பெரும் பங்காற்றியுள்ளது. இவ் வித்தியாசாலையே தெல்லிப்பளை கோவில்பற்றில் நிறுவப்பட்ட முதற்பாடசாலை ஆகும் என்ற பெருமைக்குரியது. இவ் வித்தியாசாலை அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஆண்டாக 1872இல் தான் புகழ்பூத்த யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது என்றதும் அவ்வாண்டே பாவலர் துரையாப்பாபிள்ளை பிறந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1872ம் ஆண்டு இவ் வித்தியாசாலை இரு மொழிப் பாடசாலையாக அரசினால் அங்கீகரிக்கப்பட்டு பின்பு 1982ம் ஆண்டு தமிழ்ப் பாடசாலையாக மாற்றப்பட்டது. அரைப்பரப்பு நிலம் ஒரு பரப்பு ஆகியது. சிறு கொட்டில் பெருங் கொட்டிலாக அமைந்தது. 1918ம் ஆண்டு பெண்கள் கற்கக் கூடியதாக கலவன் பாடசாலையாக மாற்றப்பட்டது. பிள்ளையவர்கள் சிவபதம் அடைந்த பின் அவரின் மூத்த மகனான திரு. விநாயகமூர்த்தி அவர்கள் பாடசாலையை நடாத்தி வந்தார்.

பிள்ளையவர்கள் இவ் வித்தியாசாலையை ஆரம்பித்து நடத்துவதில் பல சவால்களையும் பல எதிர்ப்புகளையும் எதிர் கொள்ள வேண்டி இருந்தது. கிறிஸ்தவ மிசனரிமாரின் செல்வாக்கும் அவர்களுக்கு அரசின் உதவியும் இருந்த காலகட்டத்தில் சைவப் பள்ளியை நிறுவுவது என்பது இலகுவானதல்ல. பிள்ளையவர்கள் வள்ளல்களின் உதவியோ, அரசினர் உதவியோ இன்றி ஊர் மக்கள் மத்தியில் தமக்கிருந்த மதிப்பை நம்பியே ஆரம்பித்தார் என்று கொள்ள வேண்டியுள்ளது. நவராத்திரிக் காலங்களில் ஊரில் வீடு வீடாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று பாடல்கள் படித்து ஊர்மக்களிடம் பணத்தைப் பெற்று நடாத்தினார் என்று அறியக் கூடியதாக உள்ளது. சமகாலத்தில் இவர் ஊரில் வேறுசிலர் ஒன்று சேர்ந்து ஓர் பாடசாலையை ஆரம்பித்தார்கள். எனினும் அப்பாடசாலை நிலைத்து நிற்கவில்லை. பிள்ளையவர்களுக்கு அப்போதிருந்த சிமித் பாதிரியாரின் உதவி கிடைத்ததென்றும் அவரின் உதவியால் தான் பாடசாலை அங்கீகாரம் பெற்றது என்று அறியக் கூடியதாக உள்ளது.

பின்பு 1930இல் நிறுவியவரின் இளையமகனான ஆசிரியர் சிற்றம்பலம் அவர்கள் முகாமையாளராக பொறுப்பேற்று 1961ம் ஆண்டு அரசாங்கம் பாடசாலைகளை கையேற்கும் வரை அவரே முகாமையாளராக பணியாற்றினார் அவர் துரையாப்பா பிள்ளையின் மாணாக்கரும் பின்பு அவருடனும் அவரின் மகனான தே. து. ஜெயரத்தினத்தினுடனும் மகாஜனாக் கல்லூரியில் நீண்டகாலம் கடமையாற்றியவர் ஆவார். அவர் அக்காலக் கல்விமான்களான ஹன்டி பேரின்பநாயகம், சுப்பையா நடேசன் ஆகியோருடன் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பு அவர் பணிக்கு பேருதவியாக இருந்தது. அதே ஆண்டு சு. கந்தையா தலைமையாசிரியராக பொறுப்பேற்று 1957ம் ஆண்டு வரை பணியாற்றினார். இவர் 1980களில் லண்டன் மாநகரில் தமிழ் தகவல்மையம் அமைத்து ஈழத்தமிழர் எதிர் கொண்ட பிரச்சினைகளை உலகறியச் செய்தவரான சட்டத்தரணி கந்தசாமியும் தந்தையாவார் என்பது குறிப்பிடத்தக்கது. இக் காலப்பகுதியில் இவ் வித்தியாசாலையானது பல துறைகளிலும் வளர்ச்சி காணத் தொடங்கியது. ஆசிரியர் சிற்றம்பலம் முகாமையாளராக இருந்த காலத்தை இவ் வித்தியாசாலையின் பொற்காலம் என்று கருத முடியும். வித்தியாசாலை வளாகம் விஸ்தீரணம் பெற்று ஒரு பரப்பு மூன்று பரப்பாகியது. 60X33 அடி மண்டபம் அமைக்கப்பட்டு சிரேஸ்ட பாடசாலை தராதர வகுப்பு வரை நடாத்த அனுமதி வழங்கப்பட்டு 1934ம் ஆண்டு முதன் முதலாக பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றி ஒருமாணவனும் இரு மாணவிகளும் சித்தியெய்தினர். சித்தியெய்திய ஒரே மாணவன் பின்பு வித்தியாசாலையில் ஆசிரியராக சேர்ந்து பதில் தலைமையாசிரியராக பணிபுரிந்தவருமான திரு. ஆ. காசிநாதன் ஆவார். 1952இல் நெசவு ஒரு பாடமாகவும் ஆறாம் வகுப்பு முதல் கற்பிப்பதற்கு ஒரு ஆசிரியரும் 1956இல் சங்கீதம் ஒரு பாடமாகவும் கற்பிக்கப்பட்டது. இவர் காலத்தில் மாணவர்கள் தொகை முந்நூறு ஆகவும் ஆசிரியர் தொகை பத்தாகவும் உயர்ந்தது. திரு. சிற்றம்பலம் அவர்கள் ஓர் ஆசிரியராக அவர் பாடசாலை வளர்ச்சியில் கண்ணும் கருத்துமானவர். கால நேரங்களில் அதிகமாக பாடசாலைக்கு வந்து தான் மகாஜனக் கல்லூரிக்குச் செல்வார். அவர் பாடசாலை வளர்ச்சி கருதி காலப்போக்கிற்கு அமைய தகுதி வாய்ந்த ஆசிரியரை நியமனம் செய்தார். பட்டதாரிகள், பண்டிதர்கள், சங்கீதபூசணங்கள் ஆசிரியர்களாக மிளிர்ந்தன. அவர் ஆரம்பித்த நெசவுப் படிப்பு பிற்காலத்தில் எத்தனையோ மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது.

இவ் வித்தியாசாலைக்கும் கொல்லங்கலட்டி வீரகத்தி பிள்ளையாருக்கும் இடையேயான உறவு காலத்தால் அழியாது. பிள்ளையவர்களும் அவருக்குப் பின் வித்தியாசாலையை நடாத்தியவரும் வழித்தோன்றல்களும் இந்த உறவைப் பேணி வந்துள்ளார்கள். இவ் வித்தியாசாலையில் நவராத்திரிக் காலம் மிகவும் குதூகலம் அழிக்கும் காலம். முதல் நாளிலே பிள்ளையவர்களினால் ஏட்டில் எழுதப்பட்ட இராமயாணப் பாரத ஏட்டுச் சுவடிகள், திருமறை நூல்கள், நீதிநூல்கள் எல்லாம் வித்தியாசாலை நூலகத்திலிருந்து பிள்ளையார் கோவிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பூசையில் வைக்கப்படும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பு பிள்ளைகள் கோவில் விழாச் செய்வார்கள். மாணவர்களால் கவிகள் படிக்கப்படும். கோலாட்ட நிகழ்வு நடைபெறும். இறுதி நாளாகிய விஜயதசமி விழா வித்தியாசாலை முகாமையாளரின் உபயமாக நடைபெறும். பன்னீர் வாழை வெட்டப்பட்டதும் வித்தியாசாலை ஆசிரியர்களினாலும் மற்றும் ஊரில் உள்ள ஆசிரியர்களினாலும் பிள்ளையார் வாசலில் ஏடு தொடக்கப்பட்டு மேள வாத்தியத்தோடு குருக்களும் முகாமையாளரும் முன்வர ஏடு தொடக்கிய பிள்ளைகள் பெற்றோர்கள் ஊரவர்கள் எல்லோரும் வித்தியாசாலை வந்தடைவார்கள். பின்னர் அங்கே தேவார பாராணத்துடன் ஆரம்பித்து முதல் நாள் படிப்பு சொல்லிக் கொடுக்கப்பட்டு காப்பரிசி, அவல் வழங்கப்பட்டு முதல் நாள் படிப்பு களிப்புடன் நிறைவேறும். இக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். எந்தவொரு பாடசாலையிலும் இப்படியான நிகழ்வு நிகழ்ந்தாக இல்லை.

1962இல் அரசினர் வித்தியாசாலையாக கையேற்றதும் கல்லூரியின் பரப்பளவு ஒன்பதாகியது. மேலும் சில கட்டிடங்கள் அமைக்கப்பட்டன. 1990ம் ஆண்டு யூன் தொடக்கம் வலி வடக்கில் ஏற்பட்ட போர்க்கால சூழ்நிலை காரணமாக இவ் வித்தியாசாலையைச் சூழ்ந்துள்ள கிராமங்களிலிருந்த மக்களும் இவ்வித்தியாசாலையும் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டனர். இடம்பெயர்ந்த வித்தியாசாலை 1990 யூன் தொடக்கம் 1994 டிசம்பர் வரை பண்டதரிப்பு சித்திங்கேணிப் பகுதியில் அங்குள்ள பாடசாலையோடு சேர்ந்து இயங்கிவந்தது. செல்லடி காரணமாக அங்கேயும் இயங்க முடியாது போனதால் உடுவிலில் இயங்கி வந்தது. பின்பு 1994 ஜனவரியில் மூடப்பட்ட பதினொரு பாடசாலைகளில் எமது பாடசாலையும் ஒன்றாகும். 1990 இல் இப் பாடசாலையை இயங்க வைக்க எடுத்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை. பின்பு 2011யூன் மாதம் இப்பகுதியில் மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்கம் இப்பாடசாலையை மீண்டும் இயங்க வைக்கும் நோக்கத்துடன் கட்டிடங்களை புனர்நிர்மாணித்து வருவது பாராட்டுதற்குரியது. வெகுவிரைவில் இவ் வித்தியாசாலை மீண்டும் இயங்கும் என ஊர் மக்கள் எதிர்பார்கிறார்கள். இவ் வித்தியாசாலை பழைய மாணவர்சங்கமும் இதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறது.

1972ம் ஆண்டு தை மாதம் 21ம் 22ம் திகதிகளில் பாடசாலை அதிபர் வ. மகாலிங்கத்தின் தலைமையில் வித்தியாசாலை நூற்றாண்டு விழாவும் பெற்றோர் தின விழாவும், பரிசளிப்பும் நூற்றாண்டு மலர் வெளியிடும் நிகழ்ந்தது. முதல் நாள் நிகழ்வுகளில் அப்போதைய வடமாநில கல்விஅதிகாரி டபிள்யு. டி. சி மாதந்தில பிரதமவிருந்தனராக கலந்து கொண்டார். கொல்லங்கலட்டி முன்னாள் கல்விஅதிகாரி சே. தியாகராசா நினைவுப் பேருரை நிகழ்த்தினார். மலர் வெளியீட்டு நிகழ்வுகளுக்கு தந்தை செல்வா பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கடந்த காலங்களில் இவ் வித்தியாசாலை நிகழ்வுகளில் பல பெரியார்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். வித்தியாசாலை 60ஆவது ஆண்டு விழாவில் தெல்லிப்பளை கிராமசபைத் தலைவராக இருந்த சட்ட நூலறிஞர் வ. குமாரசாமி அவர்கள் (இவர் கோப்பாய் கோமகன் வன்னியசிங்கத்தின் தந்தையாவர்) கலந்து கொண்டு சிறப்பித்தார். இவ் விழாவில் நீதியரசர் திரு. எம். ரி. அக்பர் சொற்பொழிவாற்றினார். 1936ம் ஆண்டு நடந்த நிறுவியவர்தினக் கொண்டாட்டங்களுக்கு கௌரவ வைத்திலிங்கம் துரைச்சாமி தலைமை தாங்கிச் சிறப்பித்தார். வித்தியாசாலையில் 81வது ஆண்டு விழாவிலும் நிறுவியவர் தின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாவிலும் தமிழர் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கலந்து கொண்டு நிறுவியவர் நினைவுப்பேருரை உரையாற்றினார்.

திரு. சிற்றம்பலம் அவர்கள் முகாமையாளராக இருந்த காலப்பகுதியில் வித்தியாசாலைக் கீதம் இயற்றப்பட்டது. பின்பு 1972இல் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்ட காலத்தில் புதியதோர் பாடசாலைக் கீதம் இயற்றப்பட்டது. இப் புதிய வித்தியாசாலைக் கீதத்தில் நிறுவியர் பெயர் இடம் பெறவில்லை. பாடசாலைக் கீதங்களில் நிறுவியவரை நினைவுகூரும் விதத்திலும் அவருக்கு நன்றி செலுத்தும் முகமாகவும் நிறுவியவர்களின் பெயர் பாடசாலைக் கீதத்தில் இடம்பெறுவது வழக்கமாக இருப்பதை அவதானித்த பெற்றோர்களும் பழைய மாணவர்களும் வித்தியாசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும், வித்தியாசாலைக் கீதத்தில் நிறுவியவரின் பெயரும், வித்தியாசாலை வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய முன்னாள் முகாமையாளரின் பெயரும் இடம் பெற வேண்டுமென தெரிவித்தற்கு அமைய நிறுவியவர் பெயரும் முன்னாள் முகாமையாளரின் பெயரும் உள்ளடக்கும் வித்தியாசாலைக் கீதம் ஒன்று நான் அதிபராக இருந்த காலத்தில் 1984ம் ஆண்டு பண்டிதர் மாலிங்கசிவத்தின் புதல்வர், புலவர் பாரதிநாதசிவத்தினால் இயற்றப்பட்டு 1990ம் ஆண்டு தற்காலிகமாக மூடப்படும் வரை அக்கீதமே பாடப்பட்டு வந்தது. அக் கீதம் இக் கட்டுரையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

*****

## மண்ணின் மைந்தன் அமரர் கந்தையா சிவதாசன் பாராளுமன்ற உறுப்பினர்

கொல்லங்கலட்டி மண்ணின் பெருமை சொல்ல வைத்தவர்களில் திரு கந்தையா சிவதாசன் குறிப்பிடத்தக்கவர். இவர் கொல்லங்கலட்டி கிளானையில் பிறந்து வளர்ந்தவர். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் புகழுக்குரிய பழைய மாணவர். மாணவப் பருவத்திலேயே ஆங்கிலப் புலமை மிக்கவரானார். பிற்காலத்தில் தமிழ், ஆங்கிலம், சிங்களம் என மும்மொழிகளிலும் புலமை மிக்கவராக விளங்கினார். இளம் வயதில் தீவிரமா இடதுசாரி ஆரசியல் கருத்தக்களில் நாட்டங் கொண்டவராகி, கம்யூனிஸ்ட் கட்சியில் செயற்பட்டார்.

அவரின் வாழ்வின் முக்கியமான காலகட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரியப்பட்டு பல்வேறு தெரிவுக்குழுக்களில் அங்கம் வகித்தார். திரு சிவதாசனின் மொழியாற்றலும் சர்வதேச அரசியல் பற்றிய அறிவும் பாராளுமனற் விவாதங்களில் கணிசமான தாக்கங்களை உருவாக்கியிருந்தது. பனம்பொருள் அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவராகச் செயற்பட்ட காலங்களில் அவரின் சேவை விதந்து பாராட்டப்பட்டது. சேன்ற ஆண்டு அவர் அமரரானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலை

## வித்தியாசாலைக் கீதம்

வாழிய வாழிய சைவ வித்தியாசாலை
வாழிய இதன் புகழ் நாளும்
தாயெனத் தொழுவோம் தருபயன் பெறுவோம்
நேயமாய என்றும் நினைவினில் வைப்போம்

(வாழிய வாழிய)

தொல்புகழ் அமைந்த கொல்லங்கலட்டி
எனும் இடம் உள்ளனை வாழி
சைவமாம் அமிழ்தும் தமிழ்மொழித்தேனும்
சாரும் விஞ்ஞானமும் வளர்ப்பாய்

(வாழிய வாழிய)

வேலுப்பிள்ளை நூலறிபுலவர்
நிறுவியவர் புகழ் மறவோம்
சிற்றம்பலமாம் சீர்பணிபுரிந்தார்
முகாமையாளர் அவர் பெயர் நினைவோம்
விநாயகர் அருளால் விளங்கிடும் தாயை
விருப்புடன் நாள்தோறும் பணிவோம்

(வாழிய வாழிய)

பாடியவர்: புலவர். ம. பார்பதிநாதசிவம்

1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்லங்கலட்டிக் கேணியடி

கொல்லங்கலட்டியில் கேணியடி என்பது ஓர் பிரபல்யமான இடமாக இருந்து வந்துள்ளது. கிராமத்தில் தர்க்கம் ஏற்படும் இடத்து "கேணியடிக்கு வா பேசுவோம்" என்று சொல்வது வழக்கமாக இருந்தது. அங்கு மாலைவேளைகளில் பலர் கூடுவர். நாட்டு நடப்புகள், ஊர் பிரச்சினைகள் விவாதிக்கப்படும். ஆரோக்கியமான கலந்துரையாடல் நடைபெறும்.

இக் கேணி எக் காலத்தில் எவரால் தோண்டப்பட்டது என்பது தெரியாதுள்ளது. இந்தக் கேணிக்கு அருகாமையில் இருந்த ஓர் ஆலமரத்தடியில் மாருதப்புரவிகவல்லி பிள்ளையாரை வைத்து வணங்கினார் என்றும் அதுவே அவரால் ஸ்தாபிக்கப்பட்ட ஏழு பிள்ளையார்களுள் முதலாவது என்றும் கூறப்படுகிறது. அதனால் கேணியடி ஓர் புனித இடமாகவும் கொள்ளப்பட்டது. சோமசுந்தரப்புலவரினால் இயற்றப்பட்ட இக் கோயில் திருஊஞ்சலில் "கேணிக்கடைப் பிள்ளையார்" என்று கூறப்பட்டுள்ளது.

கேணிப் படிகள் ஆரம்பிக்குமிடத்தில் சங்க நூல்களில் சொல்லப்பட்ட தர்மங்களில் ஒன்றான விலங்கினங்கள் தாகம் போக்கும் தண்ணீர் தொட்டியும் ஆரோஞ்சிக் கல்லும் (ஆதர்மம்), சுமைதாங்கியும் நிறுவப்பட்டு அவை கிராமத்துக்கு பெருமை தந்தது. (இவை யாரால் அமைக்கப்பட்டது என்பது அறிந்து கொள்ள முடியவில்லை) கடந்த காலங்களில் ஊர்பெருமகன் ஒருவர் காலைவேளைகளில் தொட்டியில் நீருற்றி நிரப்பி வந்ததை பலர் அறிவர். பின்பு இந்த நாகரிகச் சின்னம் அப்புறப்படுத்தப்பட்டது வேதனைக்குரியது.

பின்பு கேணியடிக்கு கிழக்குப் புறமாக இப்போதுள்ள கோவில் கட்டப்பட்டு கேணிக்கும் கோவிலுக்கும் இடையே தற்போதுள்ள பெருந்தெரு திரு. வ. குமாராசாமி அவர்கள் தெல்லிப்பளை கிராமசபைத்தலைவராக இருந்த காலத்தில் போடப்பட்டது. 1970ல் கிராமசபைத் தலைவராகயிருந்த தம்பு செல்வரத்தினத்தினதும் தையற்பிள்ளை என்ற மூதாட்டியின் முயற்சியாலும் ஊர் மக்கள் உதவியுடன் கேணிக்கு தெற்குப் புறமாக தீர்த்த மண்டபம் அமைக்கப்பட்டு பிள்ளையார் அங்கு தீர்த்தம் எடுப்பது வழமையானது.

கேணி அதன் முன் வளர்ந்து நிற்கும் வாகைமரம் கிழக்குப் புறமாக அம்பாலவாணர் தேசரினால் நிர்மாணிக்கப்பட்ட கோவிலும், கோவிலுக்குச் சிறப்புத் தந்து நிற்கும் தம்புடையாரால் நிறுவப்பட்ட கொடிமரமும், தேர்முட்டியும், வேலுப்பிள்ளை உபாத்தியாரால் நிறுவப்பட்ட வித்தியாசாலையும், சங்கரப்பிள்ளை மடமும், கோவிலைச் சூழ்ந்த தேரோடும் வீதியும், பூங்கொல்லையில் வளர்ந்து நிற்கும் தலவிருட்சமான கொன்றைமரமும் வடக்கு வீதியில் நிற்கும் வளர்ந்த மரங்களும், கிராமத்துக்கு ஓர் பொலிவையும் அழகையும் தந்து கேணியடி ஊருக்கோர் மையமாக திகழ்ந்தது. இன்றோ பாடசாலை இயங்காது, கோவில் திருத்தவேலைகள் நிறைவுபெறாது, மக்கள் குடியிருப்புகள் அழிக்கப்பட்டு, இடிபாடுகளாகவும் வாழ்வு கொடுத்த வெற்றிலைச் செய்கை கைவிடப்பட்டும் இக் கிராமம் பொலிவிழந்து நிற்பது வேதனை தரும் காட்சியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலியாப்பிள்ளை மடதர்மம்

முதலியாப்பிள்ளை என அன்புடன் அழைக்கப்படும் சங்கரப்பிள்ளை விசுவநாதர், கொல்லங்கலட்டி வீரகத்தி பிள்ளையார் பக்தர். மாவை முருகன் அடிமை. இவரின் தந்தையார் மாவை முருகனுக்கு கொடிமரம் எழுப்பியபடியால் அவரை எல்லோரும் "கொடிமரம் சங்கரப்பிள்ளை" என அழைப்பர். (தமிழருவி த. சண்முகசுந்தரனார் "கொடிமரம் சங்கரப்பிள்ளை" என்ற நூலில் இத் தந்தையையும் தனையனையும் பற்றி விரிவாக எழுதியுள்ளார்).

முதலியாப்பிள்ளையவர்கள் மாவை முருகன் கொடிச் சீலை கொல்லங்கலட்டியில் இருந்து எடுத்துச் செல்லப்படும் வழமையை ஏற்படுத்தி ஊருக்கு பெருமை தேடித்தந்தார். பிள்ளையவர்கள் அதற்கென கொல்லங்கலட்டியில் ஓர் மடத்தை நிறுவி அதற்கு "துவாரகோஷமடம்" என பெயரிட்டு அதனை கல்லில் பொறித்து இன்றும் அது மடத்தின் உள்சுவரில் உள்ளது. ஆண்டுதோறும் மாவிட்டபுரத்தில் திருவிழா தொடங்குவதற்கு ஒரு சில தினங்களிற்கு முன்னதாக மடத்தில் இருந்து கொடிச் சீலை எடுத்துச் செல்லப்படும் மயிலிட்டி சின்னத்தம்பி என்பவர் ஆசார சீலராக பிள்ளையவர்களால் வழங்கப்பட்ட புத்தாடை அணிந்து தலைப்பாகையுடன் கழுத்தில் மாலையுடன் கொடிச் சீலை வைக்கப்பட்ட தாம்பாழத்தை தாங்கி வர பிள்ளையவர்கள் முன்வர மேளவாத்தியத்துடன் ஊர்மனை ஊடாக கொடிச் சீலை கோவிலைச் சென்றடையும். அன்றே திருவிழா களைகட்டத் தொடங்கிவிடும். பிள்ளையவர்களுக்குப் பின் இந்தப் பணியை சரவணமுத்து ஐயாவும், செல்லாப்பா ராசாவும் தொடர்ந்து செய்து வந்தனர். இந்த மடம் இன்று சேதமடைந்து இடிபாடுகளாக காட்சியளிக்கிறது. இந்த மடத்தை புனரமைப்புச் செய்து முதலியாப்பிள்ளையின் பணிகளை தொடர்ந்து இத் தருமத்தை பாதுகாப்பது இத் தலைமுறையின் கடமையாகும்.

பிள்ளையவர்கள் சைவசமயக் கிரிகைகள், அனுட்டானங்கள் தடையின்றி நடைபெற தனது மடத்தில் ஒழுங்குகள் செய்து வந்தார். சைவக் கிரியைககள், ஈமைக்கிரியைகள் செய்வதற்கென வேதாரணியத்திலிருந்து சைவக் குருக்களை வரவழைத்து மடத்தில் அமர்த்தி இருந்தார். முதலில் சோமஸ்கந்த குருக்கள் பிள்ளையவர்களால் மடத்தில் அமர்த்தப்பட்டு இருந்தார். கீரிமலைக் கடற்கரையில் நீத்தார் கடமைகள் செய்யவருபவர்கள் இம் மடத்துடன் தொடர்பு கொண்டு ஒழுங்குகள் செய்வதும் இங்கிருந்த குருமார்கள் கடற்கரைக்குச் அழைத்துச் செல்லப்பட்டு அவர்களைக் கொண்டு அந்தியட்டி கிரியைகள் செய்விப்பது வழக்கமாக இருந்தது. கடைசியாக இங்கிருந்த குருக்கள்மார் சங்கர ஐயரும் அவரின் மருமகனான திருமறைகாடரும் ஆவார். இவர்கள் இந்திய பிரஜைகள் ஆனபடியால் இலங்கையில் இருப்பதற்கு வீசாப் பிரச்சினை ஏற்பட்ட பொழுதெல்லாம் தந்தை செல்வா பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தலையிட்டு சைவக்குருக்கள்மார்கள் பணி தொடர உதவினார்.

சங்கரஐயரும் அவரின் மருமகனும் சமயஅறிவும் பண்ணிசைபாடும் ஆற்றலும் உரியவர்களாக இருந்தனர். இங்கு அதிகமாக மாலைவேளைகளில் பண்ணிசை ஒலித்துக் கொண்டே இருக்கும். இங்கு நாயன்மார் மற்றும் சேக்கிழார் நாவலர் குருபூசைகள் ஊர்பெரியோர்கள் உபயமாக நடைபெற்று வந்தது. குருபூசைகள் மாலைவேளைகளில் நடைபெறும். அன்று கூட்டுப் பிராத்தனை நடைபெற்று ஓர் பெரியாரின் சிறிய சொற்பொழிவின் பின் பூசை நடைபெற்று பிரசாதம் வழங்கப்படுவது வழக்கம். சிவதீட்சையும் நோய்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டவர்களுக்கு திருநீறு போட்டு பார்வை பார்ப்பதும் பின்னர் நிகழ்ந்து வந்தது. வெளியூர்களில் இருந்து இங்கு வந்து பணியாற்றுபவர்களுக்கு சைவ உணவும் இங்கு வழங்கப்பட்டு வந்தது.

இந்த மடத்திற்கு அருகில் பிள்ளையவர்களின் காணியில் விறாந்தையுடன் கூடிய கடைக்கட்டிடங்கள் கட்டப்பட்டு கடைகள் நடாத்தப்பட்டு வந்தன. இங்கு நிழல் தரும் நிழல்வாடி மரங்கள் வளர்ந்து நிழல் கொடுத்தன. இரவு நேரங்களில் இந்தக் கடை விறாந்தைகளில் ஊரவர்கள் கூடி நாட்டுநடப்புகள் கலந்துரையாடுவது வழக்கம். இந்த இடம் கொல்லங்கலட்டி மரத்தடி என்று அழைக்கப்பட்டு வந்தது.

*****

## சங்கரப்பிள்ளை மடம்

கோவிலில் தென்மேற்கு மூலையில் ஓர் அறையையும் விறாந்தையையும் அருகில் ஓர் கிணற்றடியையும் கொண்டதாக இந்த மடதர்மம் இருந்து வந்தது. இதனை மலாயன் பென்சனியர் சங்கரப்பிள்ளை நிறுவினார். பின்பு அவரின் வழித்தோன்றல்களினால் திருத்தியமைக்கப்பட்டு ஓர் பெரிய மண்டபமாக இன்று உள்ளது. இங்கு கோவில் உற்சவகாலங்களில் தண்ணீர் பந்தல் நடாத்தப்பட்டு நீராகரம் வழங்கப்பட்டு வந்தது. பிள்ளையார் வீதி வலம் வரும்போது நிறைகுடம் வைக்கப்பட்டு அர்ச்சனை செய்யப்படும். தேரன்று மடை போடப்பட்டு கடலை, அவல் ஆகிய வழங்கப்படுவதும் வழக்கம்.

இம் மடத்தில் பல ஆண்டு காலமாக ஜனசமூக நிலையமும், நூல் நிலையமும் இயங்கி வந்தது. இது கிராமத்து இளைஞர்கள் கூடும் இடமாகவும் இருந்து வந்தது. இங்கு வழிப்போக்கர்கள் இளைப்பாறுவதையும் காணக் கூடியதாக இருக்கும்.

*****

## கொல்லங்கலட்டி மண்ணின் வாரிசு நடராஜா ரவிராஜ் பாராளுமன்ற உறுப்பினர்

கொல்லங்கலட்டி நல்லாசான் அமரர் வேலுப்பிள்ளை அவர்களின் சகேதரரின் பேரரான திரு நடராஜா ரவிராஜ் அவர்கள் சாவகச்சேரியில் பிறந்து வாழ்ந்தவர். சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்ற் ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர். சட்டத்தரணியாகத் தொழில் புரிந்தவர். ஆங்கிலம், தமிழ் மொழிகளில் புலமை மிக்கவராக விளங்கினார்.

முக்கியான காலகட்டத்தில் யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினராகி சிலகாலம் மேயராகவும் கடமையாற்றியவர். இரண்டு முறை யாழ்ப்பாண மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரியப்பட்டவர். எமது மண்ணைப் பீடித்த துப்பாக்கி அரக்கன் இளம் வயதிலேயே திறமைமிக்க ஒருவரை எம்மிடமிருந்து பிரித்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம்**
**பெருமையுடன் வழங்கும்**

# கலைக்கொழுந்து 2013

**காலம்:** 23.02.2013 சனிக்கிழமை மாலை 6.00 மணி

**இடம்:** Winston Churchill Hall, Ruislip, Middlesex HA4 7QL

**தலைமை:** திரு சிற்றம்பலம் கமலக்கண்ணன்
ஒன்றியத் தலைவர்

**பிரதம விருந்தினர்:** வைத்திய கலாநிதி (திருமதி) கமலா ஜெயரத்தினம்

## நிகழ்ச்சிகள்:

மங்கல விளக்கேற்றல்

மௌனாஞ்சலி

பாடசாலைக் கீதம்

நடனம்: புஷ்பாஞ்சலி – திருமதி கெங்காவின் மாணவிகள்

வரவேற்புரை – ஒன்றியச் செயலாளர்

நடனம்: பரதநாட்டியம் – திருமதி கெங்காவின் மாணவிகள்

நாடகம் – மனோகரன் மாஸடர் குழுவினர்

தலைமை உரை – ஒன்றியத் தலைவர்

பல்சுவை நிகழ்ச்சி -1 – Rebel Star Record & குட்டி ஹரி

---

**இடைவேளை**

---

நடனம்: பரதநாட்டியம் – திருமதி கெங்காவின் மாணவிகள்

பிரதம விருந்தினர் உரை

பல்சுவை நிகழ்ச்சி -2 – Rebel Star Record & குட்டி ஹரி

சிறப்பு நிகழ்ச்சி **'இன்னிசை'** – சித்திராலயா குழுவினர்

நன்றி உரை – ஒன்றியத் துணைச் செயலாளர்


**நிறைவு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது மண்ணை
# வளம்படுத்தியவர்களும்
# பெருமைப் படுத்தியவர்களும்



நல்லாசான் திரு ஆ வேலுப்பிள்ளை
பாடசாலையை ஸ்தாபித்தவர்




ஆசிரியர் திரு வே சிற்றம்பலம்
பாடசாலை முகாமையாளர்




திரு கு வன்னியசிங்கம்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்



திரு சி சிவமகாராசா
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்



திரு க சிவதாசன்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்





திரு ந ரவிராஜ்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எமது பாடசாலை: கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலை


## இன்றைய தோற்றம்

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எமது கோவில்: கொல்லங்கலட்டி பிள்ளையார் கோவில்


இன்றைய தோற்றம்














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனசமூக நிலையமும் நூல்நிலையமும்

மடத்தடி பற்றி எழுதும்பொழுது நினைவுக்கு வருபவர் சட்டத்தரணி ந.ஜீவேஸ்வரா ஆவர். முதலியாப்பிள்ளை மடத்திற்கு அருகாமையில் சரவணமுத்து ஐயா அவர்களுக்குரிய கட்டப்பட்ட கட்டிடத்தில் ஓர் அறையை ஐயா அவர்கள் பொதுமக்கள் நலன்கருதி சனசமூக நிலையமும் நூல் நிலையமும் இயங்குவதற்கு வழங்கியிருந்தார். திரு. ஜீவேஸ்வரா அவர்களை பெரும்பாலும் அங்கேயே காணமுடியும். அவர் இன்முகத்துடன் வருபவர்களை வரவேற்று கலந்துரையாடுவார். அவர் அந்த நூல் நிலையத்தில் பொறுப்பாளராக பணியாற்றி, தனது அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்தி உள்நாட்டு வெளிநாட்டு ஸ்தாபனங்களுடன் விசேடமாக ஐ.நா முகவர் நிலையங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பெறுமதியான பல நூல்களை பெற்றிருந்தார். ஐ.நாவினதும் அதன் நிறுவனங்களினதும் செயற்பாடுகள் பற்றி பொதுமக்கள் அறியக் கூடியவிதத்தில் நூல்களை அங்கு சேகரித்து வைத்திருந்தார். ஒவ்வொரு வருடமும் ஐ.நா தினம் கொண்டாடப்பட்டது.

ஓர் கிராமத்திற்கு பெருமைதருபவை அங்கு அமைந்திருக்கும் பாடசாலைகளும் கோவில்களும் நூல் நிலையங்களும் ஆகும். கொல்லங்கலட்டியில் ஓர் நூல் நிலையத்தை ஆரம்பித்து வைத்தவர் வழக்கறிஞர் வ. குமராசாமி ஆவர். அவர் தொடங்கிய பணியை முன்னெடுத்த பெருமைக்குரியவர் சட்டத்தரணி ஜீவேஸ்வரா.

கொல்லங்கலட்டி சனசமூகநிலையத்திற்கும் நூல் நிலையத்திற்கும் ஓர் வரலாறு உண்டு. அதனை அறிந்து கொள்ளும் வகையில் திரு. ஜீவேஸ்வரா அவர்களே திரு. வி. ரி. நடராசா அவர்களின் நினைவுமலரில் (1991ம் ஆண்டு) எழுதியுள்ளார். அவர் எழுதிய அவ்வரலாறு கீழ் தரப்படுகிறது.

"இலங்கை அரசாங்கம் கிராமங்களை அபிவிருத்த செய்வதற்கென கிராமங்கள் தோறும் சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம் என்பனவற்றை அமைத்தபோது, 1950ம் ஆண்டு கொல்லங்கலட்டியினாலும், மாவை கொல்லங்கலட்டி சனசமூகநிலையம் அமைக்கப்பட்டது. அந் நிலையத்தின் முதல் தலைவராக காலஞ்சென்ற திரு. ந. சங்கரப்பிள்ளையும் முதல் காரியதரிசியாக இவருடைய சிறிய தகப்பனாரும் கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலையின் முகாமையாளரும், மகாஜனக் கல்லூரியில் ஆசிரியராகவும் கடமையாற்றியவருமான காலஞ்சென்ற திரு. ஆ. வே. சிற்றம்பலமும் தெரிவுசெய்யப்பட்டனர். நிர்வாக காரியதரிசியாக யான் தெரிவு செய்யப்பட்டேன்.

1952ம் ஆண்டு திரு. வே. தி. நடராசா சனசமூக நிலையத்தின் காரியதரிசியாக தெரிவு செய்யப்பட்டபோது நிர்வாக காரியதரிசியாக யான் தெரிவு செய்யப்பட்டேன்...............

மாவை கொல்லங்கலட்டி சனசமூகநிலையம் கொல்லங்கலட்டி கேணிக்கரை வீரகத்தி விநாயகர் கோவிலுக்கு அருகாமையில் உள்ள மடக்கட்டிடத்தில் அன்று அமைந்திருந்தது. 1950ம் ஆண்டுக்கு முன்னர் நிலையம் 1933ம் ஆண்டில் அக் கட்டிடத்தில் காலஞ்சென்ற திரு. வ. குமராசுவாமி (வழக்கறிஞரும் காலஞ்சென்ற கோப்பாய் கோமான் என அழைக்கப்படும் திரு.கு. வன்னியசிங்கம் தந்தையார்) அவர்களின் முயற்சியினால் கொல்லங்கலட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிகசாலையும் நூல்நிலையமும் ஆரம்பிக்கப்பட்டது. அந்நூல் நிலையம் அன்றுள்ள முதியவர்களுக்கு புதினப் பத்திரிகை படிக்க உதவியது. 1945ல் திரு. நடராசா அவர்கள் இளைஞர்களுக்கு உதவ LOVE MAGAZINE CLUB என்ற சங்கத்தை அமைத்து ஆங்கில, இந்திய சஞ்சிகைகளையும் மாசிகைகளையும் வாசிப்பதற்கும், இரவல் பெற்றுக் கொள்வதற்கும் ஒழுங்குகள் செய்தார். இச் சேவையை 1945 தொடாக்கம் 1948 வரை நடாத்தினார்.

மாவை கொல்லங்கலட்டி சனசமூகநிலையக் காரியதரிசியாக பதவியேற்ற பின் சனசமூக நிலைய அங்கத்தவர்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதற்கென அவர் இலங்கை அரசாங்கத்தின் தேசிய சேமிப்பு இயத்தின் சேமிப்பு குழுக்களை (NATIONAL SAVINGS MOVEMENT SAVING GROUPS) அமைத்தார்.

முதியோருக்கும் கல்வி அளிக்கப்பட வேண்டுமென்பதற்காக முதியோர் கல்வி வகுப்புகள் (ADULT EDUCATION CLASSESS) நடாத்தப்பட்டு அவ்வகுப்புகளில் பங்குபெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டது.

சனசமூகநிலைய அங்கத்தவர்களில் மாணவர்களுக்கென பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி, விளையாட்டுப்போட்டி முதலியவைகளை நடாத்தினார். 1951ம் ஆண்டு தொடக்கம் ஐக்கிய நாடுகள் தினம் (ஒக்டோபர் 24ம் திகதி) சனசமூகநிலையத்தில் வருடா வருடம் கொண்டாடப்பட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டது".

*****

**Mr Siva Ramachandran**

# Thank you

# for

# Sponsoring & Supporting

# கலைக்கொழுந்து 2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தியாக மாமலை வன்னியசிங்கம் MP

- சட்டத்தரணி சிற்றம்பலம் கணேசலிங்கம்

கொல்லங்கலட்டியில் பிறந்து ~~அமரர் வன்னியசிங்கம்~~ தமிழர் போற்றும் தலைவருள் ஒருவராக திகழ்ந்து பிறந்த மண்ணுக்கு பெருமை தேடித் தந்தவர் அமரர் குமராசாமி வன்னியசிங்கம். அவர் 1947ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது பாரளுமன்ற தேர்தலில் இலங்கைத் தமிழ் காங்கிரஸ் வேட்பாளராக கோப்பாய் பகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்று அரசியலில் பிரவேசித்தார். பின்பு 1948ல் மலையக தமிழ்மக்களின் வாக்குரிமை சட்டம் தொடர்பாக தமிழ் காங்கிரசுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக காங்கிரஸில் இருந்து அவரும் தந்தை செல்வாவும், டாக்டர் நாகநாதனும் வெளியேறி 1949 மார்கழி 18ம் திகதி இலங்கை தமிழரசு கட்சியை ஆரம்பித்தனர். இக்கட்சியானது இலங்கையில் எல்லா இனங்களும் சமத்துவமாக வாழ சமஷ்டி ஆட்சிமுறை உகந்தது என எடுத்து இயம்பியது. அவர் சத்தியாக்கிரகம் சட்டமறுப்பு போராட்டம் தீண்டாஒழிப்பு போராட்டம் ஆகியவற்றை வழிநடத்தியவர். அவர் தமிழரசு கட்சியின் தலைவராக மூன்று தடவைகள் சிறப்புடன் பணியாற்றினார்.

அவர் கட்சியின் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டார். 1953ம் ஆண்டு வாலிபமுன்னணியை நிறுவினார். அதன் முதற் தலைவராக திரு. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். அந்த அமைப்பு வளர்ச்சி கண்டு காலப்போக்கில் இளைஞர்பேரவையாக பெயர் மாற்றம் பெற்று தமிழ் தேசிய உணர்வை முன்னெடுத்த பல இளைஞர்களை உருவாக்கியது. அவரது அயராத உழைப்பினால் 1956ம் ஆண்டு பாரளுமன்ற தேர்தலில் வடகீழ் மாகாணங்களில் பத்து ஆசனங்களை தமிழரசுக் கட்சி கைப்பற்றியது. அவர் தலைமை தாங்கி திருகோணமலையில் 1956ம் ஆண்டு நடந்த தமிழரசுக் கட்சியின் நாலாவது தேசிய மாநாடு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தாக கருதப்படுகிறது. அம் மாநாட்டில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மொழிவாரி சுதந்திர அரசுகள் சமஷ்டி அமைப்புக்குள் அமைக்கவேண்டுமென்றும், தமிழ் உத்தியோக மொழியாக அமையவேண்டுமென்றும் பெருந்தோட்டத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு பிராஜாவுரிமை வழங்கவேண்டுமென்றும் தமிழ் பிரதேசங்களில் சிங்களகுடியேற்றக் கொள்கை பிரகடனம் மேற்கொள்ளப்பட்டது.

வடக்கு கிழக்கு மலையகம் ஆகியவற்றில் வாழும் தமிழர்கள் ஒன்றிணைய வேண்டுமென்று செயற்பட்டவர்களில் திரு வன்னியசிங்கம் ஒருவராவர். இந்த இணைப்பிற்கு உதவும் விதத்தில் மலையகத் தமிழ்ப் பிள்ளைகள் வடக்கில் கல்வி பயிலுவதற்கு பல வசதிகளையும் புலமைப்பரிசில்களையும் ஏற்படுத்திக் கொடுத்தார். கிழக்கில் தமிழர் வாழும் இடமெல்லாம் விஜயம் செய்து அவர்களுடன் உறவை ஏற்படுத்தினார். அமரர் வன்னியசிங்கம் பற்றி பல கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. கொல்லங்கலட்டி மக்களினால் வன்னியசிங்கம் நினைவுமலர் ஒன்று வெளியிடப்பட்டது. திரு. சு. சச்சிதானந்தம் "தியாகமாமலை" எனும் நூலும் கதிர் பாலசுந்தரம் சாணக்கியன் வன்னியசிங்கம் நூற்றாண்டு மலரும் வெளியிட்டுள்ளனர். இந்த நூல்களில் திரு. வன்னியசிங்கத்தின் பணிகள் திறம்பட ஆராயப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவாளர், சமூகசேவையாளர் - அமரர் சி சிவமகாராசா MP

- சட்டத்தரணி சிற்றம்பலம் கணேசலிங்கம்

இலங்கையில், கூட்டுறவுத்துறை பெரும் அபிவிருத்தி கண்ட மாகாணமாக வடமாகாணம் திகழ்ந்தது. கிராமங்களில் உணவுப்பொருட்கள் நியாய விலைக்கு விற்பனை செய்யும் சங்கக்கடைகள் தொடக்கம் வங்கிகள் வைத்தியசாலைகள் வரை பலதுறைகளிலும் கூட்டுறவு வியாபித்திருந்தது. ஆய்வுகளின் படி வடக்கில் கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் 02ம் உலகப் போருக்குப்பின் தாயகம் திரும்பிப் பொதுச்சேவையில் ஈடுபட்ட மலாயன் பென்சனியர்களும், ஆசிரியர்களும் அத்துறைக்கு வழங்கிய தலைமைதான் காரணம் என அறியக் கூடியதாக உள்ளது. இத்துறையில் மக்கள் ஈடுபாட்டையும் தேவையையும் உணர்ந்த அரசாங்கம் அதனை அரசியல் மயப்படுத்த முனைந்தது. 1978அளவில் சட்டத்தின் மூலம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டு அதன் தலைவரை நியமிக்க சிபார்சு செய்யும் அதிகாரம் அப்பகுதி பாரளுமன்ற உறுப்பினருக்கு வழங்கப்பட்டது. அரசியலில் பிரபலம் அடைவதற்கு கூட்டுறவுத்துறையை சிலர் பயன்படுத்தினர்.

சின்னத்தம்பி சிவமகாராஜா அவர்கள் யாழ்ப்பாண கூட்டுறவுத்துறை வளர்ச்சிக்கு குறிப்பிடக்கூடிய பங்கு ஆற்றியுள்ளார். இளமைமுதலே சமூக சேவையிலும் கூட்டுறவுத்துறையிலும் நாட்டம் கொண்டவர். 1968ம் ஆண்டு மாவிட்டபுரம் விளைபொருள் உற்பத்தி விற்பனை சங்கத்தின் தலைவராக பணிகளை ஆரம்பித்து 1998ம் ஆண்டு ஸ்ரீலங்கா கூட்டுறவுச் சபையின் பணிப்பாளருள் ஒருவராக உயர்வு பெற்றார். 1978ம் ஆண்டு பாரளுமன்ற உறுப்பினர் திரு. அமிர்தலிங்கம் அவர்களின் சிபார்சு பெயரில் தெல்லிப்பளை ப. நோ. கூட்டுறவுச் சங்க நியமனத் தலைவராக பொறுப்பேற்றார். பின்பு சட்டம் மாற்றப்பட்டு பல. நோக்கு கூட்டுறவுச் சங்கத்தலைவர்கள் அங்கத்தவர்களால் தெரிவு செய்யப்படும் முறைமை வந்ததும் அவர் தொடர்ந்தும் அங்கத்தவர்களால் தெரிவுசெய்யப்பட்ட தலைவராக 2006ம் ஆண்டு வரை பணி செய்தார்.

சிவமகாராஜா அவர்கள் தந்தை செல்வாவுடன் தொடர்பு கொண்டு தனது அரசியல் வாழ்க்கை ஆரம்பித்தார். தந்தை செல்வாவின் மறைவிற்கு பின் தலைவர் அமிர்தலிங்கம் காலத்தில் தொடர்ந்தும் அவருடன் பணியாற்றினார். தொகுதிப் பணிகளை கவனிக்கும் பொறுப்பை மகாராஜா அவர்களே ஏற்று நடாத்தி வந்தார். 1990ம் ஆண்டில் ஓர் சுயேட்சைக் குழு மூலம் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். மீண்டும் 2000ம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு மீண்டும் யாழ் மாவட்ட பாரளுமன்ற உறுப்பினரானார். இவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் போர்ச் சூழலினால் பாதிக்கப்பட்ட வலிவடக்கு மக்களுக்கு பெரும் உதவிகளை பெற்றுக் கொடுத்தார்.

அவர் சமூகசேவையிலும் பெரும் ஈடுபாடு காட்டினார். கண்பார்வையற்றோர் நலம் கருதி செல்வி சின்னத்தம்பி அவர்களின் முயற்சியால் தொடங்கப்பட்ட "வாழ்வகத்தின்" தலைமைப் பொறுப்பேற்று கண்பார்வையற்றோர் நலம் பேண பலர் அநுதாப உதவிகளை வழங்கினர். ஆரம்பத்தில் வாழ்வகத்திற்கு அரச உதவி கிடைக்கப்பெறாத நிலையில் சிவமகாராஜா அவர்கள் நிதிஉதவிகளை வழங்கினார். அது மட்டுமல்லாது வாழ்வகத்திற்கு ஓர் நிரந்தர வதிவிடம் அமைத்து கொடுக்க வேண்டும் எனும் நோக்குடன் தெல்லிப்பளையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் நிலம் வாங்குவதற்கு முற்பணம் கொடுத்து உதவினார். செஞ்சிலுவைச் சங்கத்தின் வலிவடக்குக் கிளையின் தலைவராகயிருந்து பல மனிதாபிமான பணிகள் மேற்கொண்டார்.

அவர் இந்திய அமைதிப்படைகள் யாழ்ப்பாணத்திலிருந்த காலத்திலும் பின்பு இலங்கை இராணுவம் நடவடிக்கையின் போது மக்கள் இடம்பெயர்ந்த காலத்திலும் செய்த பணிகளை மக்கள் இன்றும் நினைவு கூருவர். இந்திய ராணுவம் வரும் என்பதை நன்குணர்ந்து சங்கத்து பொருட்களை எல்லாம் வேறிடங்களுக்கு இடமாற்றி கிளைகளை இடமாற்றி வலிவடக்கு மக்கள் சங்கத்தின் சேவையைப் பெற வழிவகுத்துக் கொடுத்தார். அவர் தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் தலைவராகயிருந்த காலம் அவருக்கு பெரிய சவாலாக அமைந்தது. அவர் அதனால் ஆபத்துக்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவர் ஒருமுறை ஓர் ஆயுதகும்பலால் கடத்தப்பட்டு பின்பு பொதுமக்களின் அழுத்தத்தினால் விடுதலை செய்யப்பட்டார். அவர் இறுதிவரை மக்கள் தொண்டனாகவே வாழ்ந்தார்.

*****




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாசான் வேலுப்பிள்ளை உபாத்தியாயர்

- சி தியாகராசா
கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலை
பழைய மாணவனும் முன்னாள் ஆசிரியரும்

ஒரு ஊருக்கு பெருமை தருவது மக்கள் எழுத்தறிவு பெற்று ஒழுக்கசீலராக வாழ உதவும் பாடசாலைகள். இதனால் போலும் "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்ற முதுமொழியுண்டு. திரு ஆறுமுகம் வேலுப்பிள்ளை அவர்கள் கொல்லங்கலட்டியில் ஓர் பாடசாலையில்லாத குறையை நீக்க 1869ம் ஆண்டு ஓர் பாடசாலையை நிறுவி அவ்வூருக்கு பெருமை தேடித்தந்தார். சைவ மத சூழலில் சிறார்கள் கல்வியைப் பெறவேண்டுமென விரும்பி அதற்கான ஓர் பொருத்தமான இடத்தைத் தேடி மாரதப்புரவல்லியினால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பிள்ளையார் கோவில் புனிதமான சூழலில் அதனை அமைத்தார். கோவிலுக்கு கிழக்குப்புறமாக தனக்குரியதாகவிருந்த அரைப்பரப்பு காணியில் ஓர் சிறிய கொட்டில் அமைத்து நாற்பது பிள்ளைகளை வீடுவீடாகச் சென்று அழைத்து வந்து மூன்று ஆசிரியர்களுடன் இப்பாடசாலை ஆரம்பித்து எழுத்தறிவிக்கும் பணியை ஆரம்பித்தார்.

உபாத்தியார் அவர்கள் செய்த காலத்தால் அழியாத இந்தப்பணியை கொல்லங்கலட்டியைச் சேர்ந்த முன்னாள் கல்விஅதிகாரி செ. தியாகராஜா அவர்கள் இவ்வித்தியாசாலை நூற்றாண்டு மலரில் எழுதுகையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"இன்றோ தம் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டும். பாடசாலைக்குச் செல்லும் வயது ஐந்து ஆண்டிலிருந்து ஆறு ஆண்டிற்குப் போய்விட்டதே என்பன போன்ற எண்ணங்களே பெற்றோருக்கு முதற் கவலையாக இருக்கின்றது. ஆனால் அப்பொழுதோ குழந்தை நன்றாக வீட்டிலிருந்து சாப்பிட்டு வளரட்டும். பாடசாலைக்கு ஆறுதலாகப் போகலாம் என்ற மனநிலை. இத்தகைய ஒரு காலத்தில் வேலுப்பிள்ளை உபாத்தியாயர் கொல்லங்கலட்டிப் பிள்ளைகளின் கல்வியிற் கொண்ட அக்கறையின் சின்னமே, கொல்லங்கலட்டிச் சைவப்பாடசாலையாக உருப்பெற்று நிற்கிறது. பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்பாத பெற்றோரிடம் சென்று பிள்ளைகளைக் கட்டாயம் பாடசாலைக்கு அனுப்ப வேண்டுமென்று வேண்டிக் கொள்வதுமுதல் பாடசாலைக் கட்டிட வேலைக்கு வேண்டிய பொருளைச் சேர்ப்பது, கட்டிட வேலையை மேற்பார்ப்பது, மாணவருக்குப் பாடஞ் சொல்லிக் கொடுப்பது ஈறாக எல்லாவற்றிலும் அவரே தலைமையாவர். உத்தியோக பூர்வமாக நான் பிற்காலத்தில் பல தலைமை ஆசிரியர்களின் தகையைக் கணிக்கும் கடமை எனக்கு ஏற்பட்டது. ஆனால் குழந்தைப் பருவத்தில் என்னுள்ளம் போற்றிய வேலுப்பிள்ளை உபாத்தியாயர் எல்லோரிலும் உயர்ந்து நிற்கிறார்".

உபாத்தியாயர் ஆரம்பித்த நாளிலிருந்து 1915ம் ஆண்டு பங்குனித் திங்கள் இறைவனடி சேரும் வரை தானே தலைமையாசிரியர் பொறுப்பேற்று நடாத்தி வந்தார். இவர் பணிக்கு அரசாங்கத்திடம் இருந்தோ அல்லது வேறு எந்தநிறுவனத்திடம் இருந்தோ பண உதவி எதுவும் கிடைக்காத நிலையிலும் இது இலவச பாடசாலையாகவே நடாத்தப்பட்டு வந்தது. ஊர் மக்கள் மனமுவந்து வழங்கிய அன்பளிப்புக்களைக் கொண்டு சேவை உணர்வுடன் சேவையாற்றிய ஆசிரியர்கள் பொதுமக்களின் வணக்கத்துக்குரியவர்களாக இருந்தார்கள். கிராமத்து மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்ந்தவர்கள். கட்டணம் கட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் கல்வி கற்க அவர்கள் பொருளாதாரம் இடம் பெறமாட்டாது என்பதே வேலுப்பிள்ளை உபாத்தியாயர் உணர்ந்தே இலவசக்கல்வி அளிக்க முன்வந்தார். இவர் இப் பணியைச் செய்யாவிடின் வசதிகுறைந்த பல மாணவர்கள் கல்வி கற்கும் வாய்ப்பை பெற்றிருக்க மாட்டார்கள். இவ் வித்தியாசாலையில் தமிழும், வடமொழியும், கணிதமும், வரலாறும், சமயமும் படிப்பிக்கப்பட்டு வந்தது. முதியோர் நலன் கருதி இரவு காலங்களில் பாடசாலையில் புராணம் படிக்கப்படும் வழக்கம் இருந்தது. நவராத்திரி காலங்களில் வித்தியாசாலை ஆசிரியர்கள் பிள்ளைகளுடன் வீடுகளுக்குச் சென்று தேவாரங்கள் பாடி நன்கொடைகளைப் பெற்று வித்தியாசாலையை வளர்த்தார்கள்.

உபாத்தியாயர் அவர்கள் ஆழ்ந்த தமிழ், சைவசமய அறிவுடையவரும் ஆங்கில அறிவும் உடையவராக இருந்தார். அவர் எழுதிய "சுபத்திர விலாசம்" என்ற கவிதை நூல் அவரின் புலமையை எடுத்துக் காட்டுகிறது. அவர் ஒழுக்க சீலராகவும் நன்மதிப்புப் பெற்ற நல்லாசானாகவும் திகழ்ந்தார். அவர் கல்வி பயின்ற பாடசாலை பற்றிய விபரமோ அல்லது அவருக்கு கல்விபுகட்டிய ஆசிரியர்கள் பற்றிய தகவலோ எதுவும் கிடைக்கப் பெறவில்லை. இவர் நாவலர் காலத்தில் வாழ்ந்து நாவலர் வழி பின்பற்றி வாழ்ந்தார் என்பது தெளிவு.

தந்தை தொடங்கிய பணியை அவரின் இளைய மகனான ஆசிரியர் சிற்றம்பலம் அவர்கள் தொடர்ந்தார். வித்தியாசாலை அவர் காலத்தில் சிரேஸ்ட தராதர வகுப்புகள் வரை வளர்ச்சி கண்டது. "கற்றாய்ந்து ஒழுகுக" என்ற மகாவாக்கியம் வித்தியாசாலை குறிக்கோளானது. வித்தியாசாலைக் கீதமும் இயற்றப்பட்டு பாடப்பட்டு வந்தது.

*****

Hot Spot

**Thank you**

**for**

**Sponsoring & Supporting**

**கலைக்கொழுந்து 2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியார் சரவணமுத்து JP

சட்டத்தரணி சிற்றம்பலம் கணேசலிங்கம்

தமிழருவி. த. சண்முகசுந்தரனார், சரவணமுத்து ஐயா நினைவுமலரில் எழுதிய அன்னாரின் வாழ்க்கை வரலாற்றில் "ஈழத்தில் தமிழும் சைவமும்" நலிவுற்ற காலத்தில் அவற்றை பேணி வளர்த்த பெருமை எமது கிராமங்களுக்கே உரியது. அத்தகைய கிராமங்களில் ஒன்று யாழ்ப்பாணத்து கொல்லங்கலட்டி. இந்தக் கிராமத்தில் காலத்திற்கு காலம் பெரியோர்கள் பலர் தோன்றி நற்பணி பல செய்து வந்துள்ளனர். இந்த விழுமிய வழியில் வந்தவர் கொல்லங்கலட்டி "சமாதானநீதவான் வைத்திலிங்கம் சரவணமுத்து" எனக் கூறியுள்ளார்.

ஐயா அவர்கள் 1896ம் ஆண்டு கார்த்திகை மாதம் 11ம் திகதி தோன்றி 1985ம் ஆண்டு ஆடி மாதம் 27ம் திகதி சிவபதமடைந்தார். இலங்கையில் கல்வி கற்று நிமித்தம் மலேசியாவில் தொழில் புரிந்து 2ம் உலகப் போர் முடிந்த பின் தாயகம் திரும்பி தான் பெற்ற அறிவு, அனுபவம், ஆற்றல் யாவும் யாழ்ப்பாண சமூகத்திற்கு பயன்பட வேண்டும் என்று பல பணிகளில் தன்னை அர்ப்பணித்தார். அவரின் பணிகளை சமயப்பணி, சமூகப்பணி, அரசியல்பணி என வகைப்படுத்தி ஆராய முடியும்.

கொல்லங்கலட்டி பிள்ளையார் கோவில் தேர்த்திருப்பணிச் சபையில் இருந்து தேரோட வழி செய்தார். அறநெறிக்கழகத்தை ஏற்படுத்தி சமயத்தையும், பண்ணிசையையும் சிறுவர்கள் பயில வழிவகுத்தார். திருக்கேதீஸ்வர நிர்வாகசபையினர் இவரை தம் நிதி சேர்க்கும் குழுவில் ஓர் உறுப்பினர் ஆக்கினர். ஐயா அவர்கள் திருப்பணிக்கு மலேசியாவில் நிதி சேர்ப்பதற்கு பெரிதும் உதவி புரிந்தார். முதலியாப்பிள்ளை மடத்தை அவர் மறைவிற்கு பின் பராமரித்து வந்துள்ளார்.

மலேசியாவில் பணியாற்றிய பலர் அக்காலத்தில் தாயகம் திரும்பியிருந்தனர். அவர்களும் அவர்கள் குடும்பத்தினரும் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க அவர்களின் நலம் பேணவும் ஓர் சங்கம் அமைக்க உதவி அதன் செயலாளராகவும், உப தலைவராகவும் இருந்து பணியாற்றினார். ஐயா அவர்கள் மலேசியாவில் பிறந்தவர்களுக்கு இலங்கையில் குடியுரிமை பெற்றுக் கொடுக்கும் முறையில் நிபுணராகவும், விதவைகள் ஓய்வூதியம் பெற்றுக் கொடுக்கும் முறைமையை நன்கு அறிந்தவராகவும் திகழ்ந்தார். இவரின் சேவையை அங்கீகரித்த மலேசிய அரசு அவரை ஓர் "Counsel" ஆக யாழ்ப்பாணத்தில் நியமித்தது. தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலையின் அங்கத்தவராகவும் பின்பு அதன் தலைவராகவும் இருந்து அரும்பணியாற்றினார். அவர் மலேசியாவில் நிதி சேகரித்து மலேசியா வாட் என்ற நாற்சார் கட்டிடத்தை அமைத்ததை வைத்தியசாலை ஒருபோதும் மறவாது. தனது கிராமத்தில் கிராம அபிவிருத்திச் சங்கம், ஜனசமூகநிலையம் ஆகியவற்றில் தலைவராக இருந்து கிராமத்துக்கு பெரும் பணியாற்றினார்.

எல்லாவற்றிற்கும் மேலாக தந்தை செல்வாவினால் மதிக்கப்பட்ட ஓர் தேசப்பற்றாளராவார். ஐயா அவர்கள் தமிழரசு கட்சியின் ஆரம்பகால உறுப்பினர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாவிட்டபுர மூலைக்கிளையின் தலைவராகவும் பணியாற்றினார். தமிழரசு கட்சியால் நடத்தப்பட்ட முத்திரை ஒட்டாது கடிதம் அனுப்பும் சட்டமறுப்புப் போராட்டத்திற்கு தந்தை செல்வாவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தொண்டருமாவர். பெரும் சமூகப்பணியாற்றிய அவர் தமது பணிகளுக்கு மலேசியாவிலிருந்து பணம் பெற்றது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தொடர்பாக அந்நியசெலவாணி மோசடி வழக்கு அவருக்கு எதிராக தாக்கல் தொடரப்பட்டு அவர் அதில் நிரபராதிகாக காணப்பட்டார். அவ் வழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் மு. சிவசிதம்பரம் அவர்கள் ஐயா அவருக்காக திரிபட்டு ஐயா அவர்களின் தன்னலமற்ற தூய சமூகப் பணிகளை மன்றுக்கு எடுத்துக் கூறி மன்று அவரை வழக்கிலிருந்து விடுவித்தது. தூய வெண்ணிற ஆடை அணிந்து தூய மனத்துடன் மக்கள் பணியாற்றிய இந்த பெருமகன் மக்கள் மனதில் அழியா இடம்பெற்றுள்ளார்.

*****

Somar & Co

**Thank you**

**for**

**Sponsoring & Supporting**

**கலைக்கொழுந்து 2013**

NATHAN & CO

ACCOUNTANTS

**For All Accounting**
**Book – keeping**
**Services**

(Including PAYE, CIS, VAT & TAX ADVICE)

Tel: 020 8633 6900 Mobile: 07908 241 721 Fax: 020 8649 9083
E mail: infonathanandco@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Village

One of first thoughts of Kollankaladdy is the abundance of mango trees and betel leaves which grow around this tranquil and friendly village. Its inhabitants are a tight knit community. Kollankaladdy is an ancient village in the northern part of the Jaffna district of Sri Lanka. In the centre of the village is Mavai Kollankaladdy Veerakathy Vinayagar temple, around which the village is situated. Mavai Kanthan and Keerimalai Naguleswaran temples are situated to the north and west of the village respectively.

The village has a rich religious history. Chola Queen Maruthapuraveeragavalli had a bath in Keerimalai Tank and built Maviddapuram kandasamy temple to cure her disease and horse face. Her face looked like normal human face to others but not to her. After worship in the temple her disease was cured but she continued to feel that she had a horse face. She felt this was due to not building a temple for Vinayakar. Therefore, she built seven Vinayakar temples, the first of which was built under a banyan tree in Kollankaladdy. She brought a statue of Vinayakar with udukku peedam from Chola Nadu and established it under the banyan tree. This statute is still there in the moolasthanam of the temple. Arulmihu kernikarai Vinayagar is such an ancient , important and popular temple. Furthermore, there are also two nearby Vairavar temples namely Kilanai Vairavar and Chadachappai Vairavar temples which were frequently worshipped by the villagers.

Saiva kurukkals from Vedaraniyam in Tamil Nadu used to come and stay at Mudaliyar madam in our village . They used to officiate at marriage ceremonies and also perform funeral rites. Among them Sangara Iyer was well known.

There are three rooms attached to the Mudaliyar Madam, one of which was a library and the other two were shops. At present Pavalam shop is still functioning .

The village has produced important members of the Sri Lankan community. Mr. C Vanniasingam , Mr. S Sivathasan , Mr S Sivamaharasa , and Mr. N Raviraj of our village were elected as Members of Parliament and they served the people.

One of the key priorities of the village is education. Students from our village have their primary education at Kollankaladdy Tamil Mixed School and higher education at Tellippalai Mahajana College . After the displacement of the people of the village, Kollankaladdy Tamil Mixed School has unfortunately not started functioning yet.

There was a strong sense of community spirit in the village. Everybody knew each other due to the several clubs and community facilities such as Arul Neri Kalagam, Young Men Farmers Club, Young Men Sports Club, the community centre and the library. Furthermore, Mavai Kollankaladdy Welfare Association was functioning in Colombo. Unfortunately, none of these clubs are currently active. It is hoped that they will start functioning after the people resettle in the village.

We all hope that the vibrant community spirit of the village resumes in the near future and that it is rebuilt to the loving and friendly village that we know so well.

**Mr Ganeshalingam Appahpillai**
**Dr Venothan Suri**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரணியத் தலைவர் அமரர் நாகேந்திரம் போஜன்

கொல்லங்கலட்டியில் பிறந்த அமரர் போஜன் கொல்லங்கலட்டி சைவவித்தியாசாலையில் தனது கல்வியை ஆரம்பித்து தனது இடைநிலைக்கல்வியை மகாஜனக் கல்லூரியிலும் கற்று காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலையில் 1970ம் ஆண்டு இணைந்து தன்னை பொதுச் சேவையிலும் சாரணியத்திலும் ஈடுபாடு காட்டி மக்களின் நல்மதிப்பைப் பெற்று வாழ்ந்தார்.

சாரணியத்தில் ஏழு வயதிலேயே குருளைச் சாரணனாக இணைந்து திரிசாரணனாக இருந்து தங்கத்தாரகை இராணிச்சாரணன் விருது பேடன்பவுல் விருது ஆகியவற்றைப் பெற்று இலங்கைச் சாரணிய இயக்கத்தில் ஓர் மதிப்பார்ந்த இடத்தை வகித்து வந்தார். அவர் மாவட்ட சாரணத்தலைவராகவும், மாவட்ட உதவி ஆணையாளராகவும், மாவட்ட சாரணத்தலைவராகவும் பின்பு ஆணையாளராகவும் மாகாண ஆணையாளராகவும் பதவியுயர்வு பெற்றார். இறுதியாக 2011 டிசம்பர் மாதம் இலங்கை சாரண சங்க உதவிப்பிரதம சாரண ஆணையாளராக நியமிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

அதே போல் போஜன் அவர்கள் சென்ஜோன் அம்புலன்ஸ் யாழ்ப்பாண மாவட்ட ஆணையாளராகவிருந்து பல்வேறு முதலுதவிப் பயிற்சிப் பட்டறைகளையும், பயிற்சிகளையும் நடாத்தினார். சென்ஜோன் அம்புலன்ஸில் சர்வதேச விருதுகள் பெற்று தனக்கும் யாழ்ப்பாண சென்ஜோன் அம்புலன்ஸ் பிரிவினருக்கும் பெருமை தேடித் தந்தார். இவர் இலங்கை முதலுதவிச் சங்கத்தினை 1976ல் ஆரம்பித்து அவ் அமைப்பின் மூலம் முதலுதவிப் பயிற்சி வீதி ஒழுங்கு பயிற்சி, தலைமைத்தத்துவப் பயிற்சி ஆகியவற்றை வழங்கி சேவை உணர்வுள்ள ஓர் இளம் சமூகம் உருவாக உதவினார். அவரால் பயிற்றப்பட்ட தொண்டர்கள் பொது வைபவங்களிலும், கோயில் திருவிழாக்களிலும் மேற்கொண்டு வந்த பணிகள் மக்களால் போற்றப்பட்டன.

அவர் தனது கிராமத்திற்கும் அளப்பெரிய பணிகளை மேற்கொண்டு வந்தார். மாவைக் கொல்லங்கலட்டி கிராமஅபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு அவர் பெரிதும் உதவினார். அவரின் முயற்சியினால் கிராமஅபிவிருத்திச் சங்கத்திற்கு ஓர் நிரந்தர மண்டபமும் அலுவலகமும் கட்டப்பட்டது. இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டு அவர்கள் மீளக் குடியேறுவதற்கு உதவுவதில் அவர் பெரும் கரிசனை காட்டி கிராமஅபிவிருத்திச் சங்கத்தினூடாக பல உதவிகளை வழங்கி வரும் வேளையில் அவரின் மறைவு ஓர் ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்லங்கலட்டி

பவை ஜெயபாலன்

தெல்லிப்பளை என்னும் பேரூரின் தென்மேற்கு
திசையில் தெரியும் செம் மண்ணோடு
கொல்லங்கலட்டியின் எண்ணம் எழுந்ததும்
கூடுது பல நினைவு என்னோடு

அம்பனை பன்னாலை விராங்கொடை கிளானை
அந்தவை தச்சங் காடுவரை
கந்தனின் மாவை கீரிமலை மேற்கில்
கயிந்தப்பை எல்லை தையிட்டிப்புலம்

கீர்த்திமிகு மூர்த்தி தீர்த்தம் தலம் கொண்ட
கேணியடிப் பிள்ளை யாரின் தலம்
நேர்த்தி நிறைவேற மாருதப் புரவல்லி
நிறுவிய பெருமையைக் கொண்ட நிலம்

சீமெந்து தொழிலக சங்கொலியும்
திசை எங்கும் கோயில்கள் மணி ஒலியும்
பாரத்தை ஏற்றி காலையில் சந்தைக்கு
பறக்கும் வான் வண்டில் கோண்ஒலியும்

சோளக காற்றோடு சீமெந்து தூசி
தோகையாய் ஊரை மூடிவிடும்
வானகம் அழுது மழையால் குளிப்பாட்ட
மறுபடி அழகு ஊரில் எழும்

கல்வியில் சிறந்த உத்தியோகஸ்தர் மற்றும்
கண்ணியம் தவறாத ஊராளர்
நன்நெறி பயபக்தி நேர்மை நிறைவான
நல்லோர்கள் ஊர் என்ற பெருமிதமும்

மடத்தடி காணும் கலகலப்பு ஒட்டி
மரண சடங்கு ஐயர் மனையிருப்பு
கடைத்தெரு வாசிக சாலையதும்
கடதாசி விளையாடும் மர நிழலும்

தென்னை கமுகு மாதுளை கொய்யா
தேவைக்கு பசளி முருங்கை இலை
தன்னகம் கொண்ட வீடுகள் ஓலைச்சாரார்
தாவரத்தில் தொங்கும பாய்இழைக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூத்திர கிணறுகள் துலாபட்டை இறைப்பகள்
தோண்டித் தண்ணிர் அள்ளிப் பயிர்வளர்க்க
காத்தரமான விளைச்சல் தருகின்ற
காய்கறி வெற்றிலை பணம் உழைக்க

வீட்டுக்கு வீடு நேர்த்திக் கிடாய் கோழி
வேள்விக்கு கியாதி கௌணாவத்தை
தோட்டம் துரவு எங்கும் மா பலா தெருப்பனை
தொங்கும் முட்டிகள் உசார் கொடுக்க

வேலிப் பொட்டுக்குள்ளால் கறி பகிர்வு
விறாந்தையில் பன்பல் நிகழ்மகிழ்வு
போலித்தனம் இல்லா அன்பு உறவு
போனதே கைவிட்டு புலம்பெயர்ந்து

செல்லடி துகள் போல் சிதறிவிட்டோம்
தேசம் பலதிலும் நிலைத்து விட்டோம்
உள்ளத்தை உலுப்பும் ஊர் நினைவு
ஓயாத யந்திர வாழ்வு எமது

*****

## வெற்றிலை

**திருமதி வசந்தா தயாளன் நவரத்தினம்**

கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் எனும் அன்றைய பழமொழிக் கிணங்க எமது ஊரிலே பிள்ளையார் கோவில், கேணி, சங்கக்படை, பலசரக்குக்கடைகள், பாடசாலை என பலவற்றையும் தன்னகத்தே கொண்ட ஊர் கொல்லங்கலட்டி.

இம்மண்ணிலே செல்வத்தை அள்ளிக்கொடுத்து நாவினிக்க சிவக்க, சுவை வைத்தது அந்த வெற்றிலைஈ பாக்கு.


மங்கள விழாக்களிலே கல்யாண வீடாயினும் சரிஈ சமாத்திய சடங்காயினும் கோவில் பூசையானாலும் சரி மிகவும் பாவனைக்குரியது இந்த வெற்றிலை. இதனுடன் கமுக மரம், வாழை, தென்னை மரம், அறுகம் புல்லு என ஒவ்வொரு வீடுகளிலும் பச்சைப்பசேலென்று வளர்ந்து நின்றது ஒரு காலம்.

பின்னர் நாட்டின் அனர்த்தம் காரணமாக வீட்டைவிட்டு வெளியேறி வெளியூர்களிலே தங்கி வாழவேண்டிய நிலை பல ஆண்டுகளாக நீடித்தது. ஆனால் எமது ஊரின் பயிர்கள் முற்றாகவே அழிந்து விட்டன. எமது ஊருக்கு எப்போது திரும்புவோம், எமது மண்ணை எப்போது பார்ப்போம் என அங்கலாய்த்து வாழ்ந்த காலங்கள். எமது உறவினர்கள், அயலவர்கள், சிநேகிதர்கள் எனக் கூடிக்குலாவி திண்ணைகளில் இருந்து கதைத்த காலங்கள் எப்போது என ஏங்கித் தவித்த காலங்கள் மாறி பிள்ளையார் கிருபையால் அங்கு போய் வாழக்கூடிய நிலைமை உருவாகியுள்ளதால் வெளிநாடுகளில் வாழுகின்ற எமது ஊர்மக்கள் பிள்ளையார் கோவில் மற்றும் பாடசாலை புனருத்தாரணங்களுக்கு உதவுவதைக் கவனத்தில் எடுத்து ஆவனசெய்யவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலண்டன் ஒன்றுகூடல் 2011







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலண்டன் ஒன்றுகூடல்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலண்டன் ஒன்றுகூடல் - BBQ









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org